Registered M—483.

தமிழகம்.

தஞ்சைத் தமிழ்ச்சங்கத்து மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

"தோட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு."

வால்யூம் 2.] 1906 ௵ ஜனவரி ௴ [நம்பர் 1.

விஷயங்கள்.

1.	முகவுரை	உதவிப் பத்திராசிரியர்.
2.	சாஸ்திரப் பொருண் மாலை	பத்திராசிரியர்.
3.	ஆயுள் விருத்தி நூல் ...	S. குமாரசாமிமேற்கொண்டார்
4.	நியாயமும் வைசேஷிகமும்	T. A. கோபிநாத ராவ் M. A.
5.	ஆரியர்களின் ஸங்கீத முறை	P.S. ஸுந்தரமய்யர் B.A., L.T.
6.	அச்சுதராயாப்பியுதயம்	T.S. குப்புஸ்வாமிசாஸ்திரிகள்
7.	சண்முகவிருத்திப் பரிசோதனை	கோவிந்தசாமிச் சோழகர்.
8.	விசுவநாதம்	பண்டிதர், C. S. முத்துஸாமி ஐயர்.

பத்திராசிரியர்கள் :— T. இராஜமையங்கார், B. A., L. T.
C. S. முத்துஸாமி ஐயர்.

தஞ்சை:
கல்யாணசுந்தரம் முத்திராசாலை.

வருஷ சந்தா ரூ 1—8—0. | 1906. | தனிப்பிரதி அணா 2½ / பழையபிரதி அணா 3

சிங்கப்பூர், பினாங்கு முதலான விடங்களுக்கு—ரூ 2—8—0.

Copyright Registered.

புத்தகவரவு.

சென்றமாதத்தில் வரப்பெற்ற மாற்றுப்பத்திரிகைகள் :— சுதேசி ப. 2, இ. 14-25; (2) சிங்கைஜனமித்திரன்: பு. 3, இ 18-22; (3) நாகை நீலலோசனி, பு. 16, இ. 22-[illegible]3; பு. 17, இ. 1; (4) ஆரியமித்திரன்: பு. 1, இ. 1; (5) கிராமபரிபாலினி: பு. 2, இ. 1; (6) கோயமுத்தூர்கலாநிதி; பு. 26, இ. 1-2; (7) மாதர்மனோரஞ்சினி, பு. 7, இ. 9-10; (8) விவேகசிந்தாமணி: கா. 14, இ. 8-9. (9) ஸ்ரீவாணிவிலாஸினி: வா. 2, க. 7; (10) செந்தமிழ்: தொ. 4, ப. 1-2; (11) விவேகபானு: வா. 4. பு. 11-12.

(12) முன்னோரது சுகாதார விதி விளக்கம்: இது கர்னெல் W. G. கிங் என்பவரால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டதோர் வியாசம். "ஆரிய" என்றபத்திரிகையின் ஆசிரியராகிய மகா-ள-ஸ்ரீ T. A. சுவாமிநாதையர் அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. மொழிபெயர்ப்பு இனிய நடையில் அமைந்து பயன்தரவல்லது. இந்நாட்களில் ஆங்கிலேயர்யாரும் கூறும் சுகாதாரவிதிகள் இந்தியாவுக்கு நூதனமான விதிகளல்ல. விஷ்ணுஸ்மிருதி, மனுதர்மசாஸ்திரம், அஷ்டாங்க ஹிருதயம், சரகர் வைத்தியநூல், சுவண்சாதி குணகல்பகம், தன்வந்திரிஆயுர்வேதம், தர்மவிந்து, முதலான ஆரியநூல்களிலும், அவ்வாறே பல மகம்மதியர் நூல்களிலும், இவ்விதிகளைப்பார்க்கக்காணலாம். [illegible] ஆகாரம், உடை, ஒழுக்கம், காற்று, மலங்கழித்தல் ஆகியவைகளைப்பற்றி இந்துக்கள் அனுஷ்டித்துவந்த முறைகளையும் விதிவிலக்குகளையும் செவ்விதின் எடுத்துக்கூறுவது. ஆதலின் நம்நாட்டவர்கள் இச்சிறுநூலை [illegible] வாங்கி இப்படித்துப்பயன்பெறுவார்களென்று நம்புகிறோம். இப்புஸ்தகத்தின் விலை அணா 4.

(13) பலிஜவாருபுராணம்: இது மகா-ள-ஸ்ரீ சேலம் [illegible] நரசிம்மலுநாயுடு அவர்களால் இயற்றப்பட்டதோர் அரியநூல். இந்நூலின் முதல் பதிப்பை 1899ஆ [illegible]படித்துப்பயன்பெற்று அத்தமிழ்நூலின் சிறப்பை எடுத்துவிளக்கி[illegible]. அவ்வாசிரியர் இப்போதும் அந்நூலின் இரண்டாம்பதிப்பைத் [illegible] அச்சிட்டு இருக்கிறார். "தெக்ஷிண இந்தியா சரித்திரசாரசங்கிரகத்"தின் பெருமையை ஏற்கனவே சென்றவருஷத்தில் இப்பத்திரிகையில் [illegible] வெளியிட்டோம். இந்த பலிஜவாருபுராணத்தின் முதல் மூன்று காண்டங்களும் தெக்ஷிண இந்தியா சரித்திரத்தின் சாரசங்கிரகமேயொழிய வேறில்லை. சந்திரவம்சத்தரசனாகிய யயாதியின் வம்சத்தில் பிறந்த பலிஜனைத்தலைப்பெயராகக்கொண்ட வீர்த்தராயகொருவம்சத்தின் மகிமை நான்காம்காண்டம் முதல் மூன்று காண்டங்களின்பொருளாகும். மகதநாட்டு ஆந்திரர்கள், விக்கிரமார்க்கன் குடும்பத்தார், சாளுக்கியர், காலசூரியர்கள், ஓரங்கல்நாட்டுக் கணபதிகள், கொண்டவீடு கஜபதிகள், விஜயநகரத்து நரபதிகள், தேவகிரி யாதவர்கள், கதம்பஜாதியார், ஹைஸாலபள்ளாலர், கேலாத்தியர், மைசூரர், சேரசோழபாண்டியர், தெக்ஷிண இந்தியாநாயகோர், இவர் யாவரையும்பற்றிவிஸ்தாரமாய்ச்சரித்திரம்தெரிய விரும்புவோர்கள் இந்நூலின் முதல் மூன்று காண்டங்களிலும் பார்த்துத்தெளிந்துகொள்ளலாம். பலிஜவாருடைய ஜனனாதிவிசேஷங்கள், இவர்கள் குடிப்பெயர், வீட்டுப்பெயர், கோத்திரப்பெயர், இவர்களுக்குள் இருக்கும் பல உட்பிரிவார்களுடைய பெயர்கள், இவர்கள் விவாகமுறைமுதலிய பல விஷயங்களையும் மற்றக்காண்டங்களில் பார்த்துக்கொள்ளலாம். இந்நூலை வெளியிடுவதில் ஆசிரியர்மிகுந்த பிரயாசை எடுத்துக்கொண்டிருக்[illegible]ர் என்பது சொல்லாதேயமையும்.

பத்திராசிரியர்.

உ

சுபமஸ்து.

தமிழகம்.

வால்யூம் 2. | 1906வரு ஜனவரிமீ | நம்பர் 1.

நுதலுரை.

ஈசனருளால் யாம் சென்றவருஷத்திற்றொடங்கிய இத்தமிழகத்தின் முதற்றொகுதிமுடிந்து இப்போது இரண்டாந்தொகுதி தொடங்குகின்றது. ஏற்கனவே தமிழகத்திற் பலபத்திரிகைகளிருக்க இப்பத்திரிகையை வெளியிட்டதின் நோக்கங்கள் பிறதேசத்தார் செய்த சாஸ்திரவாராய்ச்சிகளின் பயனைப்பரவச்செய்தலும், தமிழ்நூலாராய்தலும், வசனநடையைப்பெருக்கலும் என்றேசென்ற வருடாரம்பத்திற் கூறினும். அந்தநோக்கங்கள் கைகூடினவோவென்று நோக்குங்கால் ஒருவாறு கைகூடிவருகின்றனவென்றே சொல்லவேண்டியிருக்கிறது. ஆயினும் எமக்குமனம் அமைதிகொள்ளுதலில்லை. தமிழகத்தில் உண்ணுஞ்சோறு போலவும் பருகுநீர்போலவும் பரவச்செய்யவேண்டிய சாஸ்திரப்பொருள்கள் கணக்கற்றவையாயுள்ளன. அவைகளின் ஒருகோடியையேனும் யாம் சென்றவருடத்திற் காட்டினேமல்லேம். அதற்குக்காரணம் ஆங்கிலம்வல்ல பண்டிதர்களிற் சிலர்க்குத்தங்கள் வியாசங்களைத் தமிழில் எழுதித்தரத்தடைப்பட்டதும், சித்திரப்படங்களைச்றிவெளியிடற் புலப்படாத சிற்சிலவியா

சங்களை நிறுத்திவைத்ததுமேயொழிய வேறல்ல. ஆங்கிலமும், தமிழிலும்வல்ல பண்டிதர்களும், பலபத்திராசிரியர்களும் இப்பத்திரிகையைப்பற்றித் தம்தம் ஏற்றமான அபிப்பிராயங்களை வெளியிட்டும், எம்மை இடைவிடாது தூண்டியும் நிற்றலால் யாம் இவ்வருடமும் தமிழகம் நிலவுமாறு வெளிப்போந்தனம். எவ்வளவு எளிய நடையில் எழுதினாலும், அரியதும் பயன்றரவல்லதும் ஆனதால் விஷயம் காலக்கிரமத்தில் படிப்போர் யாவர்க்கும் அறிவையும், இனிமையையும் பயக்கும் என்பது திண்ணம். சென்ற வருடத்திலுள்ள சந்தாதாரர்கள் தங்கள் சந்தாத்தொகையைக் காலந்தாழ்க்காது அனுப்பியும், இவ்வருடத்தில் இன்னும்பலர் சந்தாதாரர்களாகச் சேர்ந்தும் ஆதரிப்பார்கள் என்று நம்புகிறோம். ஊக்கத்துடன் ஆக்கமும் அமையினன்றோ பொன்மலர்க்கு நாற்றம் புகுத்தியது நிகர்க்கும்? ஆதலால் தமிழகம் சிறக்கத் தமிழர்களே முன்வரல்வேண்டும்.

உலகநன்மைக்கென்றே கங்கணங்கட்டிநிற்கும் மஹான்கள் இறைவனருளையும் பெரியோர்கள் அபிமானத்தையும் எப்போதுஞ் சிந்தித்தெழுகின்ற எம்மை ஒரு சிறியஹேதுவாக்கி நன்மை புரிவார்களாக. சுபமஸ்து.

உதவிப்பத்திராசிரியர்.

சாஸ்திரப்பொருண்மாலை.

1. மலையேறுதல் *

எமக்குத்தெரிந்து எத்தனையோ பேர் மலைமேல் ஏறியிருக்கிறார்கள். அவர்களுக்குள் மிகவும் உயரம் ஏறிய கீர்த்தியைப் பெற்றவர் ஸர் உல்லியம் மார்ட்டின் கான்வே என்பவர். அவர் ஏறிய உன்னதமான மலைச்சிகரம் தென்னமெரிக்காவிலுள்ள ஆண்டிஸ் என்ற மலைத்தொடர்பின் சிகரங்களில் ஒன்றாகிய அக்கன்கர்குவா என்பதே. ஆனால் மற்றொருகாலத்தில் ஒருதடவை அவர் பாமிர்ஸ் என்ற பீடபூமியின் தெற்கேயுள்ள காரகோரம் மலைத்தொடர்புகளில் எட்டுமாதகாலம் வசித்திருக்கிறார். இமய மலைச்சாரல்கள் அவருக்குத் தண்ணீர்பட்டபாடு.

---

* Adapted from the Central Hindu College Magazine-Editor

மலைவியாதியை அவர் வருணித்திருக்கிறார். அதுமிகவும் கவனிக்கத்தக்கது. சமுத்திரம் சென்றவர்களுக்குச் சமுத்திர நோய் எவ்விதமோ அவ்விதமேதான் மலை ஏறியவர்களுக்கு மலைவியாதி என்கிறார். 14,000 அடி உயரம் ஏறும்வரையில் ஒன்றுமில்லையாம். அதற்குமேற்பட்டு ஏற ஏறத் தலைநோயும் கொடிய வியாதியும் உண்டாகின்றனவாம். ஆனாலும் சிலருக்கு 16,000 அடிவரையில் வியாதியுண்டாகிறதில்லை. அதைப்பொருட்டாய் நினையாமல் மேலே செல்லச் செல்ல, மனிதன் சகிக்கிறதில்லை. காதுகள் ரீங்காரஞ் செய்கின்றன. வாயிலெடுப்பு உண்டாகும் போற்றோற்றி அதிகரிக்கின்றது. மூக்கு, உதடு, ஈரல் முதலான பாகங்களிலிருந்து இரத்தம் வெளிவருகிறது. தூங்க முயற்சி செய்து இடதுபுறமாய்த் திரும்பிப்படுத்தால், இருதயம் படபடவென்று அடித்து நம்மை எழுப்பிவிடுகிறது. சகிக்க முடியாதவர்களுக்கு ஒருசமயம் பிரஞ்ஞாபங்கமுண்டாகிச் சாவும் நேருகிறது.

ஆதலால் தைரியமும் பொறுமையுமுள்ள ஒருவனே மலைஏற யோக்கிதையுள்ளவனாகிறான். மலைவாழும் ஒருவனுக்குப்பிறந்த காலத்தே பராக்கிரமமமையவேண்டுமென்றும் மலையேறுந்தன்மை பயிற்சியால் வாராதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. என்றாலும், ஒருவன் சிறிதுயர்ந்த மலைச்சிகரங்களை ஏறுதல் உடம்பிற்கும் மனத்திற்கும் பலத்தையும் கிளர்ச்சியையும் கொடுக்கிறது. ஆதலால் ஜாக்கிரதையோடும் தகுந்த வழித்துணையோடும் குன்றுகளையும் மலைகளையும் ஏறிப்பார்த்தல் மிகவும் நன்று.

2. மின்னலும் இடியும். *

இடி எவ்வாறு உண்டாகின்றது என்று காட்ட ஒருசிறிய சோதனை உண்டு. முத்திரை யரக்குத் துண்டொன்றையெடுத்துக்கொள்க. அதனை ஒருபட்டுநூலால் கட்டிக்காற்றிலே தொங்கவிடுக. மற்றோர் அரக்குத்துண்டையெடுத்து ஒரு கம்பளியால் உறையத்தேய்த்துக்கொள்க. இவ்வாறுதேய்த்த அரக்குத்துண்டைத் தொங்கவிட்டிருக்கிற அரக்குத்துண்டண்டை கொண்டுவருக. இரண்டு துண்டும் ஒன்றையொன்றுவிட்டு விலகியகலும். அவ்வாறே ஒரு கண்ணாடித்துண்டைத் தொங்கவிட்டு, தேய்த்த மற்றோர் கண்ணாடித்துண்டைக்கிட்டகொண்டுவந்தால், இரண்டு

* Adapted from the Central Hindu College Magazine-Editor

கண்ணாடித்துண்டுகளும் ஒன்றையொன்று வெறுக்கும். இப்போது கண்ணாடித்துண்டைத் தொங்கவிட்டு தேய்த்த அரக்குத் துண்டைச் சமீபத்தில் கொண்டுவருக. கண்ணாடித்துண்டும் அரக்குத்துண்டும் ஒன்றையொன்று பிடித்துக்கொள்கின்றன. இப்போது அரக்குத்துண்டைத் தொங்கவிட்டு, தேய்த்தகண்ணாடித்துண்டைக் கிட்டக்கொண்டுவருக. இப்போதும் அரக்குத் துண்டும் கண்ணாடித்துண்டும் ஒன்றையொன்று அளவளாவுகின்றன. தேய்ப்பதினாற் கண்ணாடியினிடத்திலே உண்டாகின்ற மின்சாரம் 'ஆண்சக்தி' மின்சாரம் என்றும், முத்திரையரக்கினிடத்திலே உண்டாகின்ற மின்சாரம் 'பெண்சக்தி' மின்சாரம் என்றும் சொல்லப்படும். அதனாற்றான் ஒன்றையொன்று கவர்கின்றன.

இடிகள் உண்டாவதற்குமுன் பூமியில் ஒருவிதமான மின்சார சக்தி அதிகமாய்த்தங்கியிருக்கிறது. மேகத்தில் அதற்கு நேர் மாறான மற்றோர் மின்சாரசக்தி நிறைந்திருக்கிறது. பூமியினிடத்தும் ஆகாசத்தில் உலாவுகின்ற மேகத்தினிடத்தும் மாறான இரண்டு மின்சாரசக்திகளும் நிரம்பித்ததும்பும்படி பூரித்திருக்கின்றமையால், அவ்விரண்டு சக்திகளும் வாயுமண்டலத்தின் வழியாக ஒன்றையொன்று விரும்பிச்சேர நெருங்கும் முயற்சி அதிகப்படவே, ஆண்சக்தி பெண்சக்தியை நோக்கித் தாவுகின்றது. இச்சக்திகள் திடீரென்று தம்மை விடுவித்துக்கொண்டு பாய்தலால் மின்னற்கொடி படர்கின்றது. வாயுமண்டலத்தைத் தாக்கிப்பாய்தலால் இடியுண்டாகின்றது.

பூமியிலிருந்து 'ஹோ' என்று உயர்ந்த ஏதேனும் ஒன்று,—ஒரு கோபுரம், ஒரு மாளிகை, ஒருமரம் முதலியன இவ்விரண்டு மின்சார சக்திகளையும் சேர்த்துவைக்கத் தகுதியான மத்தியஸ்தம் ஆகின்றன. ஆதலால்தான் பெருங்காற்று மழையடிக்கும்போது இத்தன்மையான மத்தியஸ்தக்காரர்கள் பக்கத்திலே போகக்கூடாதென்கிறார்கள். மேற்றிசை நாடுகளில் உயர்ந்த மாளிகைகளுக்கு முந்தி ஒரு நீண்ட இரும்புக்கம்பியைப் பொருத்திவைப்பார்கள். அக்கம்பியின் உயர்நுனி மாளிகையின் சிகரத்தின்மேலே எழும்பிநிற்கும்; அடிநுனி மாளிகையின் பாதத்தின் கீழே பூமியில் இறங்கிநிற்கும். இக்கம்பி மின்சாரத்திற்கு இடையூறில்லாமற்செல்ல வழியாகின்றது. மேகங்கள் தம்மிடத்தில் உண்டாகிய நெருப்புப்பாணங்களை அபாயகரமன்றியில் விடுவிக்க ஏதுகாரமாகின்றது. இவ்விதமான கம்பிப்பாதைகள் ஏற்

படாவிட்டால், மார்கழியில் இடி விழுமோ? வந்த மாளிகை தகர்ந்து போமோ?

(இன்னும் வரும்.)

பத்திராசிரியர்.

ஆயுள் விருத்தி நூல்.

(1-ம் தொகுதி, 220-ம் பக்கத் தொடர்ச்சி.)

தாவரங்கள் பிராணிகளைப்போல முயற்சி, அசைவு முதலியவைகளால் ஜீவசக்தியின் சேதத்தை யடையாமலிருந்த போதிலும், புஷ்பித்துக் கனிதருவதினால் தம் சக்தியினுடைய பெரும் பாகத்தை இழந்து விடுகின்றன. பொதுவாகத் தாவரவர்க்கங்களுள், நீண்ட ஆயுளுள்ளவைகளுக்குப் பின்வரும் இயற்கைக் குணங்கள் அமைந்திருக்கின்றன. அவைகளாவன:— (1) மெதுவாய் வளர்ச்சியடைதல் (2) தாமதமாய்ப் பரவி விசாலித்தல் (3) அவைகளின் அவயவங்கள் (கிளை முதலியன) தகுந்த கெட்டித் தன்மையும், அவைகளின் சாறு நிரம்பவும் தண்ணீரில்லாமல் உறைந்து கெட்டியாகக் கூடிய தன்மையையு முடைத்தாயிருத்தல் (4) மிகவும் பரந்து நீண்ட கிளைகள் நிறையப் பெற்றிருத்தல் (5) ஆகாயத்தை அளாவி உயர்ந்து வளர்தல் முதலியவைகளாம்.

இதுவுமன்றித் தாவர வர்க்கங்களுக்குக் கிளைகளைக் கத்தரிப்பதினாலும் புஷ்பிக்கிற காலத்தில் உண்டாகிற மிகுந்த சேதத்தைத் தடுத்துத் திரும்பவும் அவைகளுக்குப் பலத்தைக் கொடுக்கும்படி புஷ்பங்களை உதிர்ப்பதினாலும், பனி, கெட்ட காற்று, போஷணைக் குறைவு முதலியவைகளை நீக்குவதினாலும் நீடித்த காலம் விருட்ச ஜாதிகள் பட்டுப் போகாமல் உயிரோடிருக்கும்படி செய்யவுங் கூடும்.

இதை இம்மட்டோடு நிறுத்தி, ஜீவவர்க்கங்களின் ஆயுள் விருத்தியைப் பற்றியும் அவைகளில் ஒவ்வொரினத்துக்கு முள்ள பேதாபேதத்தையும் இனி விசாரணை செய்வோம். தாவரவர்க்கத்துக்கு அடுத்த மேற்றரத்திலுள்ளதும், பிராணி வர்க்கத்தில் இழிந்ததுமான புழுக்களின் ஆயுளைப்பற்றி யாராயும் பட்சத்

தில், அவைகள் நிரம்பவும் மெலிந்த தன்மையுடையன வாதலால் சீக்கிரத்தில் மரணமடைகின்றன என்று தெரிகிறது. ஆனால் அதற்குத் தாவரவர்க்கத்தைப் போலவே ஜீவசக்தியின் நஷ்டத்தைச் சடுதியில் நிவர்த்தித்துக் கொள்ளும்படியான எதுவுமமைக்கப் பட்டிருக்கிறது. சில புழுக்களின் அவயவத்தைப் பல துண்டுகளாகச் சேதித்தாலும், அந்த ஒவ்வொரு துண்டுகளிலும் ஜீவன் நிலை பெற்றிருப்பதாகத் தெரிவதால் அவைகளின் ஆயுள் நிர்ணயத்தைப்பற்றித் திட்டமாய்ச் சொல்லக்கூடாது. இதற்குச் சாட்சியாக முதனூலில் கம்பிளிப்பூச்சிகளில் சிலவற்றைக் கொன்று வெயிலில் நன்றாயுலர்த்தித் திரும்பவும் அனலாற் சூடாக்கப்பட்ட பாத்திரத்தில் வறுத்து, ஆறுமாதம் சென்ற பிறகு சிறிது உஷ்ணமுள்ள ஜலத்தில் அவைகளை நனைக்க, மீண்டும் உயிர் பெற்றிருப்பதாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இவைகளைப்போல் மிருகங்களுக்குள் சிலவற்றிற்குமிந்தத் தன்மை யிருப்பதாகத் தெரிகிறது. ஆதலால், பிராணிகளின் அவயவங்கள் எவ்வளவு நிறைவற்ற (imperfect) தாயிருக்கிறதோ, அந்த அளவுக்கு ஆயுள் பலமிருப்பதாகத் தோன்றுகிறது.

சில பூச்சிகள், அவைகளின் ரூபம் மாறுதலடைவதினால் நீண்ட ஆயுளுள்ளவைகளா யிருக்கின்றன. எப்படி யெனில் அவைகள் 2, 3. வருஷம் வரையிற் புழுக்களாகவும் பின்பு ப்யூபா (Puba, அதாவது கூடுகட்டி அதனுள் வசித்தல்; கூடுகட்டும் புழு;) என்னும் பெயருடையதாய் யாதொருவித சலனமுமின்றித் தீனியுமில்லாமல் வெகு காலம் வரையிலும் இருந்து கடைசியாய், அவைகள் இறகுகளோடு நேர்த்தியான ரூப அவயவத்தையடைந்து ஜனனேந்திரியங்களமையப் பெற்று முட்டையிட்டுச், சீக்கிரத்தில் மரணமடைகின்றன. நிலம், நீர் ஆகிய இரண்டிலும் உயிர் வாழ்க்கையாகிய ஜந்துக்களும் நீண்ட ஆயுளுடையவைகளாகக் காணப்படுகின்றன. உதாரணமாய் ஆமை, தவளை முதலியவைகளை யெடுத்துச் சொல்லலாம். ஆமைகள் தலையறுக்கப் பட்ட பிறகும், தவளைகள் இருதயம் அவைகளினின்று நீக்கப்பட்ட பிறகும் உயிரோடிருப்பதை நாம் பார்க்கிறோம். ஒரு ஆமை 6 மாதகாலம் வரையில் ஆகாரமில்லாமல் ஜீவித்திருந்ததாகத் தெரிகிறது. இதற்குக் காரணம் யாதெனில் ஆமைகளுக்குச் சரீரநாசமும் திரும்ப அவைகளுக்குத் தகுந்தபடி புதுப்பித்தலும் (Consumption & Restoration) மிகவும் குறைவா

யிருப்பதினால் தான். மேலும் ஆச்சரியம் உண்டாகக்கூடிய ஒரு விஷயமும் நாம் கேள்விப் பட்டிருக்கிறோம். அதாவது, தேரைகள் கற்களுக்குள்ளிருந்தே ஜீவிக்கிறதாகச் சொல்லப்பட்டிருத்தல். ஆனதுபற்றியன்றோ, கடவுளை,

"கருப்பைக்குள் முட்டைக்கும் கல்லினுட் டேரைக்கும்
விருப்புற் றமுதளிக்கு மெய்யன்"

என்பதாய் ஆன்றோர்கள் கூறியிருக்கின்றார்கள்.

பாம்பு, ஓணான், பல்லி முதலியவைகள் தங்களின் தோல் அல்லது சட்டையை நீக்கிப் புதுப்பித்துக் கொள்வதினாலும், பட்சிகள் இறகுகளையும் மூக்கின் அலகுகளையும் மீண்டும் புதுப்பித்துக் கொள்வதினாலும், மிருகங்கள் மயிர்களை உதிர்த்தும் புதுமயிர் முளைக்கப் பெறுதலினாலும், தங்கள் ஜீவனை விர்த்தி செய்து கொள்ளுகின்றன.

முதலை, ஆமை, மிருகப்பிராணிகளில் நீண்ட ஆயுளுள்ளவைகள். ஆமை மிகவும் முயற்சி குறைவாயிருப்பதினால் அதன் உடலினிறையைக் கணக்கு செய்து, திரும்பவும் 20 வருஷம் சென்று நிறையைக் கணக்கிட்டுப் பார்த்தாலும் நிறை அல்லது கனத்தில் யாதொரு வித்தியாசமுமில்லாமலிருக்கிறதாகத் தெரிகிறது.

முயற்சிக் குறைவினால் ஆயுள் விருத்தி பெறுமென்னும் கொள்கை, மேற்சொல்லியதினால் ஒருவாறு நிலை பெற்றிருக்க, அதற்கு எதிர்ப் பட்சத்தில் மிகவும் பெரிதும், பலமுள்ளதும், சுறுசுறுப்பும், ஆகாரம் உட்கொள்வதில் தீவிரமும், அசாத்தியமான ஜீரண சக்தியுமுள்ளதுமான முதலைகளுக்கு வயது ஜாஸ்தியா யிருக்கிறதாகத் தெரிகிறது. அதுவுமன்றியில் அவைகள் நாளாவிர்த்தியில் வளர்ச்சி அல்லது நிறை அதிகப்பட்டு வருகிறதாகவும் சொல்லப்படுகிறது.

மீன் வகுப்பில் (Pike, Carp) கெண்டை மீன் என்னும் மச்சங்கள் நீண்ட ஆயுளுள்ளவைகள். மீன்கள் மற்றப் பிராணி வர்க்கத்தைப்போல உடல் வெளிச் சேதமடையாமல், "சிறு மீன்கள் பெரு மீனுக்கிரை" யென்றபடி ஒன்றையொன்று புசித்துக் கொண்டேயிருக்கின்றன. அப்படிக்கில்லாத பட்சத்தில் நமக்குப் பிராணாதாரமாகிய ஜலாதாரங்கள் யாவும் மச்சங்களின் பிணக் குவியலாலுண்டான துர்க்கந்தத்தோடும் சுகாதாரக் குறைவும்

நேரிட்டுச் சிலர்கள் இறக்க நேருமென்பதைத் திரிகாலமு முணர்ந்துள்ளவராகிய சர்வஞ்ஞரென்னும் கடவுள் எவ்வளவு கூர்ந்த புத்தியோடும் இயற்கையை யமைத்திருக்கிறாரென்பதை நினைத்து நாம் அவரை எக்காலத்திலும் மறவாமல் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோமல்லவா!

இப்பால் பட்சி சாதிகளின் ஆயுளைப்பற்றி ஆராய்ச்சி புரியுங்கால் அவைகளுக்குப் பூரண வயது பெறுவதற்குத் தகுந்த சௌகரியம் ஏற்பட்டிருக்கிறதைக் காணுகிறோம். ஏனெனில் (1) அவைகளின் சரீரம் வெயில், காற்று, பனி, மழை முதலானவைகளாற் பீடிக்கப்படாதபடிக்குத் தகுந்த காப்பாய் இறகுகள் அவைகளுக்குக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. (2) அவைகளின் சிறகுகள் பூர்வத்திற் சொல்லியபடி உதிர்ந்து புதுச்சி[...]கள் முளைக்கக் கூடியதாயிருப்பதாலும் ஆயுள் விருத்திய[...]ளுக்கு ஏற்படுகிறது. (3) பரிசுத்த ஆகாயத்திலேயே அவைகள் பெரும்பாலும் வாசம் செய்தலால் நல்ல பிராணவாயுவை உட்கொள்ளவும் அனுபவிக்கவும் கூடியதாயிருக்கிறது. (4) அவைகள் சிறகுகளால் ஆகாயத்திற் சலனஞ் (motion) செய்து அடிக்கடி பறக்குந் தொழிலைச் செய்து கொண்டிருக்கின்றன. அதிலும் இன்னொரு விசேஷமிருக்கிறது. அதாவது பறவைகளில் இரண்டு விதமான அசைவு அல்லது பெயர்ச்சி இருக்கிறது. அதில் ஒன்று முயற்சியோடு கூடியது. (அதற்கு ஆங்கிலத்தில் Active Motion என்று சொல்லப்படும்.) மற்றொன்று முயற்சியல்லாத அசைவு அல்லது இயக்கம் (அதற்கு ஆங்கிலத்தார் Passive Motion என்று சொல்லுவார்கள்.) பட்சிகள் பறக்கும்போது நாம் நுட்பமாய்க் கவனித்தால் மேற்சொல்லிய இரண்டும் அவைகளிடத்திலிருப்பதை நாம் காணலாம். முதலில் சிறகுகளை மடக்கி மடக்கி அடித்தும் திரும்ப நிச்சலனமாய்ச் சிறகுகளை விரித்துப் பறக்கிறதை நாம் பார்க்கக் கூடும். இந்த இரண்டு அசைவும் ஒரு பிராணியிடத்தில் ஏற்பட்டிருக்கிறதானது ஆயுள் விர்த்திக்கு அனுகூலம் என்பதாகச் சொல்லப்படுகிறது.

(இன்னும் வரும்)

S. குமாரசாமிமேற்கொண்டார்.

நியாயம் அல்லது தர்க்கமும், வைசேஷிகம் அல்லது பரமாணுவாதமும். *

இந்தியாதேசத்துக்கு அரிஸ்டாடல் என்னலாம் படியானவர் கௌதமர் அல்லது கோதமர் என்னப்பட்டவர்; இவர் தர்சனமாகிய 'நியாயம்' என்பது இந்துக்களுடைய 'தர்க்கசாஸ்திரம்'. இவர்காலம் (இன்னதென்று) ஏற்படவில்லையாயினும் இவர் அஹல்லியை என்பாளை மணந்தார் என்று கூறியுள்ளது. இவர் 'புத்திப்பிராமண்ணியகாலத்'தவர் என்பதற்குச் சந்தேகமேயில்லை; ஆயின் இவர் கபிலருக்குப்பின் சுமார் ஒரு நூற்றாண்டுக்குப் பிற்பட்டேயிருந்திருக்கலாம். இவரால் (இயற்றப்பட்ட) நியாய சூத்திரம், இரண்டு 'நாள்கள்' என்று பெயர் கூறப்பட்ட இரண்டு பாடங்களைத் தம்முட்கொண்ட ஐந்து புஸ்தகங்களாயின்றது; இப்பாடங்கள், மறுபடியும், பலசூத்திரங்களால் தொடுக்கப்பட்ட வெவ்வேறு விஷயங்களாய்ப் பிரிக்கப்பட்டு இருக்கின்றன. இன்றைக்கும் நியாயம் இந்துக்களில்விசேஷமாய் மதிக்கப்படுவதோடுங்கூட, காச்மீரம், ராஜபுதனம், வடஇந்தியா முதலிய தேசங்களினின்றும் வித்தியார்த்திகள் வங்காளத்திலிருக்கும் நவத்துவீபத்தின் நியாயக்கிடைகளில் வாசித்துவருவதைக் காண்கிறோம். மகத, அங்க, கோசல, விதேஹ தேசங்களினின்றும் வந்து தார்க்கிக கௌதமர் தாமே பாடஞ்சொல்லிய காலத்துப் பாடங்கேட்ட வித்தியார்த்திகளைப்போல் இக்காலத்தவர்களும்தத்தம் ஆசாரியர்கள் சுவக்கிரகங்களிலேயே (குருகுல) வாசஞ்செய்துகொண்டு பாடம் படித்துவருகிறார்கள். (நம்) இந்தியாவில் மற்றெவையும் மாறிப்போய்விட்ட இக்காலத்தும் தொன்றுதொட்டு நடந்துவந்த சிறுகவே பழங்காலத்திய பாரம்பரியப் படிப்பு மாத்திரம் (இன்றைக்கும்) ஸம்ஸ்கிருத பாடசாலைகளில் தலைமுறை தலைமுறையாகச் சொல்லிக்கொடுக்கப்படுகிறது. காலவித்தியாசத்தால் இப்பழைய பள்ளிக்கூடங்கள் பிரபலமடையக்கூடாமல் பிள்ளைகள் ஏகாந்தமான குருகுலவாசத்தி

* Translated from Dutt's "Ancient India" (Students' Edition).

னின்று நீங்கி, (ஆங்கில) பாடசாலைகளுக்குங் கல்லூரிகட்கும் போகத்தலைப்பட்டார்கள். (மேற்கூறிய) ஸம்ஸ்கிருத பாடசாலைகளின் உபாத்தியாயர்கள் தமக்கு (இவற்றினின்று) வரும் ஊதியம் போதாது போகவே, பற்பல விடங்களிலும் (சென்று) (இப்பழம் படிப்பின்) அபிமானிகளிடம் பொருள் தேடுகிறார்கள்; (இப்பள்ளிகளில்) பிள்ளைகளும் நாளடைவிலே குறைந்துகொண்டு வருகிறார்கள். ஆயினும், தர்ம சூத்திரத்தினின் றடுத்து நாம் சுருக்கமாய் நிரூபித்தமாதிரியான பழயவிதப் படிப்பை, யாவரும் வியக்கத்தக்க பிடிவாதத்துடன், இந்துபண்டிதர்களும் வித்தியார்த்திகளும், விடாதுபற்றிப் பழகிவருகிறார்கள். இக்காலத்தில் மாறுபாடுகளினின்றும் புதுமைகளினின்றும் தப்பி இப்புராதன நடவடிக்கை பலகா[illegible] வாழ்வதாகவென்று விரும்புகிறோம்.

நியாய சாஸ்[illegible] விசாரியமான விஷயங்கள் முதலில் கூறு[illegible]றது. இவை[illegible]:—(1) பிரமாணம் (2) பிரமேயம். இவ்வி[illegible]ம் முக்கியமா[illegible] விஷயங்கள். இவற்றிற்குள்ளடங்கிய சிறு விஷயங்கள் பதினா[illegible]; அவை, (3) சம்சயம், (4) பிரயோஜனம், (5) திருஷ்டாந்தம், (6) ஸித்தாந்தம், (7) அவயவம், (8) தர்க்கம் (9) நிர்ணயம், (10) வாதம், (11) ஜல்பம், (12) விதண்டம், (13) ஹேத்துவாபாசம், (14) சலம், (15) ஜாதி, (16) புத்தி என்பன.

பிரமாணமென்பது நாம் முற்கூறியவாறு நான்குவகைப்படும் பிரத்தியக்ஷம், அநுமானம், உபமானம், சப்தம் (அல்லது) ஆப்த வசனம் (என்பன). காரியத்துக்குக் கட்டாயமாய் முன்னிகழவேண்டியது காரணம்; (காரணத்தின்) பின்னிகழவேண்டியதும், அப்படியன்றி முடியாததுமே, காரியம் (என்னப்படும்). காரண காரியங்களுள் இருவகைச் சம்பந்தமிருத்தல்கூடும். (அவைதாம்) ஸம்யோகம், ஸமவாயம் (என்று பெயர்படும்). ஆகவே காரணங்கள் மூவகைப்படும்; (1) நூல் துணிக்காவதுபோன்றது முதற்காரணம், (2) நெய்தலால் துணியாவது போன்றது துணைக்காரணம், (3) கருவிக்காரணம் என்பது துணிக்குத்தறி வேண்டுவதுபோன்றது.

அறியவேண்டிய பதார்த்தங்களாகிய பிரமேயங்களாவன; (1) ஆத்மா, (2) சரீரம், (3) இந்திரியம், (4) அர்த்தம், (5) புத்தி, (6) மனசு, (7) பிரவர்த்தி, (8) தோஷம், (9) மரணம் (அல்லது) தேஹாந்தரப்பிராப்தி (10) பலன் அல்லது பிரதிபலன், (11) துக்கம், (12) முக்தி என்பன.

பிரத்தியேக மனிதர்க்கும் ஆத்மா வெவ்வேறு; அது உடம்புமல்ல, இந்திரியங்களுமல்ல. அது அறிவுக்கு இருப்பிடம். ஒவ்வொரு ஆத்மாவும் விபுத்துவத்தோடும், சாச்வதமுமாயிருத்தலோடுங்கூட அதனின் ஜீவிதகாலத்துச் செய்யும் கர்மானுசாரமாக தேஹாந்தரப் பிராப்தி அடைகின்றன. இதுகாறும் கூறியமட்டும் (நியாயம்) கபில (சாங்கிய) சாஸ்திரத்துக்கு ஒத்திருக்கிறது. ஆயின் பரமாத்மா ஒருவருண்டென்றும், அவர் அத்தியந்த ஞானஸ்வரூபி, ஜகத்கர்த்தா, ஜகத்காரணர் என்றும் நியாயம் கூறுகிறது. சரீரம் ஜடம், பஞ்சேந்திரியங்கள் பிரகிருதி சம்பந்தமானவை, மனம் இந்திரியங்களுக்கு ஆஸ்தானம், இவ்வளவு விஷயமும் கேட்டபின், நியாயமும், மற்றைய பிற இந்து தர்சனங்களும் எவ்வளவுமட்டும் சாங்கியத்துக்குக் கடமைப்பட்டுள்ளனவென்பது ஒவ்வொருவரும் அறியத்தக்கதே; ஆதலால் சாங்கியமே வாஸ்தவமாய் மற்றெல்லாவற்றிற்கும் ஆதிபூதமாயிருந்ததுமன்றி எல்லா தர்சனங்களிலும் [illegible]கு பூர்த்தியடைந்ததென்றும் சொல்லலாம்.

புத்தி என்பது ஞாபகசக்தி பாவனாசக்தி என்று இருகூற்றினது. சத்தியபாவனை என்பது ஐயமற்ற பிரமாணத்தால் அறியப்படுவது. அப்படி பிராமாண்ணியத்தால் கிடைத்திலதெனின் அற்றுகாது. இதே பிரகாரம், ஞாபகம் நிசஞாபகம், விப்ரமஞாபகம் என்றிருவகைப்படும். இந்திரிய பூதங்கள் நாற்றம், சுவை, ஒளி, ஊர், ஓசை யென்பன.

பிரவர்த்தி அல்லது கர்மம் என்பது புண்ணிய பாபங்களுக்கும், தர்மாதர்மங்களுக்கும் ஹேது. ஐரோப்பிய சித்தாந்திகள் சொல்லுவதுபோலவே நையாயிகர்களும், கர்மத்துக்குக் காரணம் சுகப்பிராப்தியும் துக்கநிவாரணமும் என்பதே (என்று கூறுகிறார்கள்).

தேஹாந்தரப்பிராப்தி என்பது ஆத்மா அடுத்தடுத்துப் பற்பல தேகத்தில் நுழைவது. துக்கம் என்பது மூலமான தோஷம். துக்கத்துக்குக் காரணமாகிய இத்தோஷங்கள் இருபத்தொருவகைப்படும். ஆத்மா ஞானத்தாலன்றிக் கர்மத்தால் முத்தியடையாது.

இதுகாறும் சொல்லியவற்றைக்கொண்டு, சாங்கியத்திலில்லாததும், நியாயத்தில் இதுவும் ஓர் சித்தாந்தமென்று கூறத்தக்க புதுமைகள் ஒன்றுமில்லை என்பது காணப்படும். ஆயின் நியாயத்

தின் விசேஷமென்னவென்றால், சரியான 'அவயவ'த்தால் அடையும் அனுமானக்கிரமமட்டுமே. (இவ்விசேஷத்தைக் குறித்து) நம் மேனாட்டுத்தார்க்கிகர்கள், சரியான மார்க்கத்தால்தர்க்கிக்கும் விஷயத்தை எவ்வளவு புத்தி நுட்பத்துடன் ஆராய்ந்திருக்கிறார்களோ, அவ்வளவும் இவர்களும் (இந்துக்களும்) செய்திருக்கிறார்கள் என்று டேவிஸ்துரை எழுதுகிறார். அடியில் இந்த 'அவயவத்'துக்கு ஒரு உதாரணம் கொடுத்துக் காட்டுவோம்.

1. மலையில் நெருப்பிருக்கிறது.
2. ஏனெனில் அதினின்றும் புகை கிளம்புகிறது.
3. மடைப்பள்ளியினின்றும்போல புகை கிளம்பின விடத்து நெருப்புண்டு.
4. மலையிலும் புகை கிளம்புகிறது.
5. ஆதலால் மலையில் நெருப்புளது.

(மேற்காட்டி[illegible]ரணத்தால்) இந்த அவயவம் ஐந்து அங்கங்களை உடை[illegible]ருக்கிறது (என்பது புலப்படும்). அவையாவன:—(1) பி[illegible]ஞை, (2) காரணம், அல்லது ஹேது அல்லது அபதேசம், (3) உதாஹரணம் அல்லது நிதர்சனம் அல்லது திருஷ்டாந்தம், (4) புத்தியைச் செலுத்தலாகிய உபாயம், (5) முடிவு அல்லது நிகமனம். இதின் முன்னிரண்டு அல்லது பின்னிரண்டு அங்கங்களைக் களைந்துவிடின் இதே அரிஸ்டாடலின் 'அவயவம்' ஆய்விடுகிறது.

(இன்னும் வரும்.)

T. A. கோபிநாதராவ், M. A.

ஆரியர்களின் ஸங்கீதமுறை.

(1-ம் தொகுதி, 224-ம் பக்கத்தொடர்ச்சி.)

இனி நாம் ராகம்பாட எப்படிக்கற்றுக்கொள்ளவேண்டுமென்பதையும், மேலும், சரியான ராகஞானமுண்டாகும் விதம் எப்படி என்பதையும் அறியவேண்டும். ஏற்கனவே, நாம் பாட்டுக்கள்தான் முதலில் ஏற்பட்டனவென்றும், பிறகு வெகுகாலம் சென்றபின், ராகமென்பது பாடப்படும் வழக்கத்தில் வந்ததென்றும் சொல்லியிருக்கிறோமல்லவா? அதிலேயே, ராகம் என்னும் பாட்டுக்களுக்கு ஆதாரபூதமான விஷயம் அறியவேண்டுமென்

னால், பாட்டுக்களாகிய ஆதேயத்தை முதலில் அறிந்துகொண்டு பிறகு அதிலிருந்து ராகமாகிய ஆதாரத்தை அறியவேண்டியதாயிருக்கிறது. அதாவது, உதாரணமாகச் சொல்வோமாகில் ஒருவன் ஆநந்தபைரவி என்னும் ராகத்தின் ஸ்வரூபம் அறியவேண்டுமென்றால், பத்யம் என்று பெண்கள்பாடும் பாட்டுக்களை முதல் முதலில் காதால் கேட்டுப், பிறகு வேறு தினுசுப்பாட்டுக்களையும் காதால் கேட்டு, இந்தப்பத்யம் என்னும் பாட்டுக்கும் வேறு விதமான பாட்டுக்களுக்கும் பேதம் இருக்கிறது என்று காதால் உணர்ந்து, பின் இந்தப் பத்யம் பாடுவதற்கு ஆதாரமான ராகத்துக்கு ஆநந்த பைரவி என்னும் பெயர் என்று கற்றுக்கொள்ள வேண்டும். ஒரு குழந்தைக்கு கன்றுக்குட்டி என்கிற ஞானத்தை ஏற்படுத்தவேண்டும் என்றால் நாலு ஐந்து கன்றுக்குட்டிகளைக் காண்பித்து, கன்று அல்லாத வேறு சில வஸ்துக்களைக் காண்பித்து அவைகளிலிருந்து கன்று என்னும் ஞானத்தைத் தர்க்க சாஸ்திரப்படி உபமாநத்தைக்கொண்டும் வியதிரேகத்தைக்கொண்டும் ஏற்படுத்துவதுபோலவே, ஒரு ராகத்தைக் கற்றுக்கொடுக்க, அந்த ராகத்திலுள்ள முதல்தரமான, ராகபாவத்தை நன்றாய் அடக்கிய ஸாஹித்யத்தைப் பாடிக்காண்பித்து அதிலிருந்து தான் ராகஞானத்தை ஏற்படுத்தவேண்டும். (இந்தமாதிரி ராகம் கற்கும் முறையைத் தமிழ்தேசத்தில் உள்ளவர்கள் அறிய விரும்பினால், அவர்களுக்குத் தெரிந்த அருணாசலக்கவி ராமாயண பதத்திலிருந்து அந்தப்பதம் எந்த ராகமோ அந்த ராகத்தை அறிகிறது சகஜமாயிருக்கிறது).

என்றாலும், பாட்டுக்களைமட்டும்கேட்டு அதிலிருந்து உண்டாகிற அந்த ராகபாவஞானம் அந்தராகத்தைப்பற்றிய ஸ்தூல ஞானம்தான். அதாவது இந்த ஞானம் இதைச் சம்பாதித்துக்கொண்டவருக்கு தானேபாடும் சக்தியைத் தராது; மேலும் அந்த ராகத்தைப்பற்றிய பூரண ஞானத்தைத் தராது. என்றால் அதில் பிசகுகள் ஏற்படும் பக்ஷத்தில் அதைக் கண்டுபிடிக்கும் சக்தியைத்தராது. ஒருவன் சுகம் தராமல் பாடிக்கொண்டிருக்கும் பக்ஷத்தில் அது இன்ன காரணத்தால் சுகம் தரவில்லையென்பதையும் கண்டறியமுடியாது. எப்படி, ஒரு குழந்தைக்கு ஒரு பாஷையில் பேசமட்டும் கற்றுக்கொடுத்து விட்டால் அது வியாகரணம் முதலியவை செய்கிறதற்குப்போதுமானதாயிருந்தபோதிலும், பேச்சுக்கு அந்தக் குழந்தைக்கு

அந்த பாஷை தெரியும் என்றாலும் அந்தப் பாஷையில் பூர்ண ஞானம் வந்துவிட்டது என்றுசொல்ல இடமில்லையோ ;—அதாவது அந்தப் பாஷையின் எழுத்துக்களை அறிந்துகொண்டு, பேசும் வார்த்தைகள் இன்னதுதான், இவ்விதமாக ஆனவை, என்று அறிகிறவரையில், அந்தக் குழந்தைக்கு நல்ல பாஷா ஞானமும் அந்தப் பாஷையைப் பிறருக்குத்தெளிவாகவும், எளிதாகவும் கற்பிக்கக்கூடிய ஞானமும் ஏற்படாதோ அதுபோலவே, வார்த்தை சொல்வதாகிய (அல்லது வார்த்தை சொல்வதையறிவதாகிய) ராகங்களைப்பற்றிய ஸ்தூல ஞானம் ஏற்பட்டவுடன், அது பூர்ண ஞானம் அல்லவென்றும், நாம் அந்த ராகத்தினுடைய ஸ்வரூபத்தை [illegible]றிந்துகொண்டதாக நினைக்கலாமேயொழிய அந்த ராகத்தை [illegible]டிக்காண்பிக்கவாவது சொல்லிக்கொடுக்கவாவது முடியாத க[illegible]ம் என்றும் நாம் அறிந்துகொள்ளுகிறோமல்லவா? (இப்படியி[illegible]க்க நம்மவர்களில் வெகுபேர்கள் தாங்கள் நல்ல ஸ்திதியிலிரு[illegible]லேயோ அல்லது மற்ற எந்தக் காரணத்தாலோ, இங்கிலீஷ்[illegible]டி தப்பும் தவறுமாய்ப் பேசக்கூடிய ஒரு பட்லர் இங்கிலீஷில[illegible]யப் பிரஸங்கம்செய்யப்படுங்காலத்தில் அதைப்பற்றிக் குணதோஷம் சொல்ல ஆரம்பித்தால் எப்படியோ அதுபோல, மேலே சொன்னமாதிரியான ராகத்தைப்பற்றிய ஸ்தூலஞானத்தையே ஸங்கீத பூரணஞானம் என்னும் பிரமைகொண்டு தாங்கள் ஸங்கீத வித்துவான்களது பாட்டைக் குறித்து ஏற்றம் குறைவு சொல்லுகிற வழக்கம் வெகுவாய் யாவரும் பார்க்கலாம்.)

மேலேசொன்னதைக்கொண்டு நாம் முக்கியமாய் அறிய வேண்டியது என்னவென்றால், அந்த உபமானத்துக் கொத்தபடி, நாம் ராகத்தின் ஸ்தூல பாவம் என்னும் "பேசும் பேச்சு" என்பதை அறிந்தவுடன் அது பூரணஞானம் அல்லவென்று அறிவதுடன், அந்தப் "பேசும் பேச்சு" எந்த வார்த்தைகளாலானதென்பது அடுத்ததாய் அறிந்துகொள்ளவேண்டிய விஷயமாகும். அதாவது, ராகத்தின் அமைப்பில் உள்ள சின்னச் சின்ன பாகங்கள் அந்த வார்த்தைகளுக்குச் சமானமாகும். நாம் அடுத்ததாய் அதை அறிந்துகொண்டு அதை அகாரமாய் உச்சரித்து வழக்கப்படுத்திக்கொள்ளவேண்டும். பிறகு வார்த்தைகள் லிபிகளாலானவையால் அச்சிறுபாகங்கள் எந்த ஸ்வரங்களால் ஆனவையோ அந்த ஸ்வரங்கள் அந்த ராகத்தின் லிபிகளாம். எப்படிச் சில லிபிகள் தான் சேர்ந்து ஒரு வாக்கியமாகிறதோ, அப்படி

யே சில சில ஸ்வரங்கள் மட்டுமே சேர்ந்து தான் ஒரு ராகமாகிறது. ஸங்கித சாஸ்திரத்தில் லிபிகள் பதினேழும். இந்தப் பதினேழும் ஸ்வரங்கள் என்று வழக்கத்தில் உள்ளவைகளே.

ஆகவே, நாம் முதல் முதல் ராகத்தின் சின்ன பாகங்கள் எந்தஸ்வரங்களானதோ அதைக் கற்றுக்கொண்டு அதிலிருந்து ஸ்வரபேத ஞானத்தை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். இந்த ஸ்வரபேத ஞானம் உண்டாகும்போதே ஸ்வரங்களை எழுதவும், தனியாய் உச்சரிக்கவும் பழக்கிக்கொண்டு விடவேண்டும். இப்படி உண்டாகும் ஸ்வர ஞானந்தான் சரியான ஸ்வர ஞானம் என்று நாம் சொல்லவேண்டும். ஆனால் நம்மவர்களில் ஸ்வர ஞானம் ஏற்படுத்திக்கொள்ளும் மாதிரி மேல்சொன்னமாதிரி இல்லை. அவர்களும் சரி, நமதுபாடகர்களும் சரி, எல்லாரும் அப்படி ஸ்வரஞானம்செய்துகொள்ளாமல், ஸரளியையும் ஜண்டை வரிசைகளையும்அப்யஸித்து ஸ்வரஞானம் செய்துகொள்ளுகிறார்கள். அப்படி ஏற்பட்ட ஞானம் பாட்டுக்குச் சம்பந்தமில்லாமலிருந்தால், நாம் அப்படி ஏற்பட்டிருக்கிற ஸ்வரஞானத்தைக்கொண்டு பாடுங்காலத்தில், எந்தராகங்களைப்பாடினாலும் அந்த ராகத்தின் சரியானஸ்வரூபம் வராமல் சுகம் தராமல் இருக்கிறது. ஒருவர் பாடும் பாட்டு நமது காதில் ஏறி, மற்றொருவர் பாட்டு காதில் ஏறாமலிருக்கிறதற்குக் காரணம் இதுவே. சில பாடகர்கள் பாடும் காலத்தில் ஏகமாகச் சத்தங்களைப் போட்டுக்கொண்டு கேட்பவர் மனதில் சண்டை போடுகிற அவசரமாய் ஸ்வரங்களை உச்சரித்துக்கொண்டு, மேலே சொன்ன விதமாய் ஏற்படுத்திக்கொண்ட ஸ்வர ஞானத்தால் பாடிக்கொண்டிருப்பதனால், அவர்கள் சுகமாய்ப் பாடத் தெரியாதவர்கள் என்கிற அபிப்பிராயம் கேட்பவர் மனதில் ஏற்படுத்துவதுடன், இந்த மாதிரிதான் நமது முன்னோர்களாகிய ஆரியர்கள் ஸங்கீதம் இருக்கும் என்றும் அவர்கள் ஸ்வரம்பாடுவதும் இப்படித்தான் முரட்டுத்தனமாய் இருக்கும் என்றும் ஸங்கீதத்தில் வித்வத்து ஏற ஏற அது சுகம் தராமல் பாடக்கற்றுக்கொள்வதுதான் என்கிற நம் ஸங்கீதத்தைப்பற்றிய ஒரு பெரிய அபவாதத்தை ஏற்படுத்திவிடுகிறார்கள். நமது சாஸ்திரரீதியான ஸங்கீதம் என்றுசொல்வது என்னவென்றால் எந்த ஸங்கீதம் சுகம்தரவில்லையோ அது ஸங்கீதம்அல்ல என்பதும், ஸங்கீதம் கலப்பில்லாது சுகம் தருவதே என்பதாம்.

எப்படி நமது காலத்தில், எந்த வித்தையும் சரியான முறைப்படியும், மாணாக்கர் எளிதில் அந்த வித்தையின் நுட்பங்களை எல்லாம் அறியும்படிக்கும் கற்பிக்கப்படுகிறதில்லையோ அதுபோலவே, ஸங்கீதமும் சரியான முறைப்படி கற்பிக்கப்படுகிறதில்லை. என்றாலும் ஈசுவரனுடைய ஆஞ்ஞையால் உபாத்தியாயரது பலம் இல்லாமல் அவர் அவரது பூர்வஜந்மஸம்ஸ்காரத்தால் ஸங்கீதத்தின் தத்துவத்தைச் சிலர் சிலர் அறிந்துவிடுகிறார்கள். அவர்களை நாம் மஹான்களென்றுசொல்லும் ஸ்ரீதியாகய்யர், மஹாவைத்யநாதய்யர் முதலானவர்களாம். மேலேசொல்லிய முறைப்படி ஸ்வரஞானப் பயிற்சிசெய்துகொண்டவர்க்குப் பாடும் பழக்கம் நல்லவழியில் செல்லுமேயொழிய கெட்டவழியில் ஒருபோதும் போகாதென்பது நிச்சயம்.

ஆகவே, இதுவரையில் சொன்னதைக்கொண்டு நாம் ராகம் கற்றுக்கொள்வதா[illegible] முதல்முதலில் பாட்டிலிருந்து ராகத்தின் சிறுசிறுபாகங்க[illegible]றுக்கொண்டு, அவை எந்தஸ்வரங்களானவை என்பதை[illegible]வைகளை உச்சரிக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும். அதிலிரு[illegible]த அந்தராகத்துக்கு ஆரோஹணம் அவரோஹணம் என்பதையும் கற்றுக்கொள்ளவேண்டும். இப்படிக் கற்குங்காலத்திலேயே அந்தந்த ராகங்களில் முக்கியமாய் வரும் சின்னபாகங்களாகிய ஸ்வரத்தொகுதிகள் எவை எவை வருகின்றனவென்றும் அறிந்து ஞாபகத்தில்வைத்துக்கொண்டுவிடவேண்டும்.

(இன்னும் வரும்.)

P. S. ஸுந்தரமய்யர், B. A., L. T.

அச்சுதராயாப்பியுதயம்.

(1-ம் தொகுதி, 296-ம் பக்கத்தொடர்ச்சி.)

மேலும் அவர்கள் துலுக்கர்களின் பதிகளில் மூட்டிய பெருநெருப்பு அப்பக்கத்திலுள்ள மாடமாளிகைகளில் ஜ்வலித்துக் கொழுந்துவிட்டெரிந்துகொண்டிருந்தது.

இவ்வாறு விஜயநகரத்துப் படைவீரர்கள் ஆண்மைமிகுந்து எல்லைகடந்து புரிந்த பெருந்தீமைகளை அச்வபதி நாட்டதிபதி நினைந்து நினைந்து வலி குறைந்து வயிறெரிந்து பெருமூச்செறிந்து ஆற்றமாட்டாதவனாய்க் கடுஞ்சினங்கொண்டான். அவன்

கண்கள் சிவக்க, கால்கள் பதற, ஆடைகள் நழுவ, நாவுளற, தலை நடுக்கமுற, குடித்தவன்போலவிருந்த விடம்விட்டெழுந்து தடுமாறினான். "என் தோள்வலியினாலென்ன பயன்" என்று தன்னையே இகழ்ந்து பேசி, தோள்களில் நன்றாக உறைக்கப் பல தடவை ஓங்கி அறைந்துகொண்டான். புருவங்களை நெறித்து, தன் கைகளைக்கடித்து, தானிருந்தவிடத்திற் செய்திருந்த ஜோடனைகளைப் பிய்த்தெறிந்து, கிட்டவந்தவர்களின்மேல் "உற்" என்று மேல்விழுந்தான். பக்கத்திற்போக எவரும் பயந்தனர். கோபத்தால் உதட்டைக்கடித்து, தலையை உலுக்கி, மீசையை முறுக்கி, சபையிலிருந்தோரை நோக்கி, "இவன் தகப்பன் நம் முன்னோர்களுக்குச் செய்த தீமைகளால் நமக்குண்டான கோபம் நாட்படவே சற்று உறக்கமுற்றது போலிருந்தது. இப்பொழுது இவன் தன் சேனைகளுடன் வந்து அதனை எழுப்பிவிட்டான். நான் இவனுக்குப் பயந்தவனோ? பெருங்காற்றடித்துப் பெருமலைகள் ஒருபோதும் குலுங்கத் தலைப்படினும், [illegible]ருனைக்கன்றி எனதுள்ளம் கலக்கமுறாது. இப்பொழுது [illegible] ஒரு கை பார்ப்பேன்" என்று உரத்துக்கூறி, உள்ள[illegible] கைவலியும் மன ஆக்கமும் மிகுதியாயுள்ள படையாளர்களை ஒன்று சேர்த்து, சத்துருக்களிடமிருந்து ராயச்சூரைக் காக்க ஒரு பெரும்படையை ஆயத்தஞ் செய்தனுப்பினான். தானுமிருந்தவிடம் விட்டு நகராமல் தன் பட்டணத்திலேயே காப்புச்சேனைகளை வைத்துக் கொண்டு கூடியவாறு எச்சரிக்கையாயிருந்தான்.

ராயச்சூருக்கு அனுப்பப்பட்ட பெருஞ்சேனையை மஹாகான் நடத்திச்சென்றனன். அவன் சிலநாளைப் பயணஞ்சென்று ஓரிடத்தில் தங்கி, சேனைகளை யுத்தத்திற்குச் செலுத்தினன். சமுத்திரம் முகத்துவாரத்தில் நதிகளை யெதிரேற்று உட்சென்று பிறகு அலைகளை உட்கொள்வதுபோல, இந்த அரசருடைய சைனியங்கள் துலுக்கர்களின் வரவை எதிர்பார்த்து, ராயச்சூரை விட்டுக்கிளம்பி, சத்துருக்களை மேல்விழுந்து எதிர்த்தனர். அவர்களுடைய சிம்மநாதங்களாலும் யுத்தபேரிகளினோசைகளாலும் எங்கும் ஒரே சத்தமாக முழங்கிற்று. அரசர் பக்கத்தார்கள், பாதங்களும் முகங்களும் மட்டும் வெளியிற்றெரிய, சரீரத்தின் மற்றைப் பகுதிகளெல்லாம் தோற்கவசங்களால் மூடப்பட்டு, கைகளில் கத்திகளையும் கேடயங்களையும் பிடித்து, கடலில் ஆமைகள் போல, போர்க்களத்தில் சத்துருக்களிடையில்

கூசாமல் சஞ்சரிக்கத் தலைப்பட்டனர். இருகட்சிகளின் சைனியங்களும் ஒன்றோடொன்று சேர்ந்து எங்கும் ஒரே புழுதியாகக் கிளம்பவே, பஞ்சபூதங்களில் பிந்திய நான்கும் முதலாவதாகிய பிருதிவியோடு ஸாயுஜ்யம் பெற்றனபோலக் காணப்பட்டன. இரண்டு எதிர்பாகங்களினின்றும் எதிர்காற்று வீச, அலைகளால் தள்ளுண்டு, ஓரிடத்தில் எதிர்முட்டி, இடைவிடாது மழை பொழியும் பெருமேகங்கள்போல, இருபக்கத்தார் சேனைகளும் ஒருவர்மேலொருவர் சரமாரி பொழிந்தனர். போர்க்களத்தில் உதிரவெள்ளம் ஆறாகப் பெருகத்தலைப்பட்டது. ஆயுதங்களால் காயப்பட்டு மூர்ச்சைபோனவர்களும், அம்புகள் தைத்துக் குத்துயிராக ஊனுமுதிரமும் நிரம்பிய சேற்றில் கிடந்து திண்டுமுண்டாகிறவர்களும், யானைகளின் துதிக்கைகளால் மேலே தூக்கி யெறியப்பட்டவர்களுமாகப் பலர் இறக்கக்காணப்பட்டனர். துலுக்கர்களின் கர்வம் குறைவுபடவில்லை. அப்பொழுது இந்து அரசர் தம் படைவீரர்கள் மாத்திரம் பொருதல் போதாதென்று கண்டு, தாமே நேரே நின்று சத்துருக்களோடு யுத்தஞ் செய்ய ஆரம்பித்தனர். சிலரை பிராஸாயுதத்தின் கூரிய நுனிகளாலும், சிலரை பட்டஸத்தாலும், வேறு சிலரை அம்புகளாலும், மற்றுஞ் சிலரைக் கையோயாமல் கத்தியினாலும் துண்டித்துத் தொலைத்தனர். தாம் ஒருவரேயாயினும், கைலாகவத்தால் பகைவர்கள் பலருக்கும் பலபேராகத் தோற்றுவித்தனர். ஒருவன்மேல் ஒருதடவைக் கதிகமாக ஆயுதப்பிரயோகஞ் செய்வதில்லையென்பதை வீரவிரதமாகக்கொண்டனர். அப்பொழுது சத்துருக்கள் அவரைக்கண்டு நடுக்கமுற்று, தட்சயாகத்தைத் தொலைக்க வீரபத்திரனுருவெடுத்த சிவபிரானோ, அசுரர்கள் பூண்டொழிக்கப் புகுந்த திருமாலோ, கடுஞ்சினங்கொண்டு காண்டீவத்தைக் கையிலேந்திக் காண்டவவனத்தை எரித்த அர்ஜுனன் தானோ, வென்று சங்கிக்கலாயினர். பெரும் பெரும் பாம்புகளை யெல்லாம் தீயில் தள்ளி ஸர்ப்பயாகஞ்செய்த ஜனமேஜய மகாராஜன் கதையை நினைப்பூட்டுமாறு, பெரும் பெரும் யானைகளின் துதிக்கைகளைத் துண்டித்துத் தள்ளிப் போர்க்களத்தில் கீழே பரப்பினர். இவரது செய்கைகளுக் கேற்ப இவரது படையாட்களும் அஞ்சா நெஞ்சராய்ச் சத்துருக்களை அஞ்சுங் கலங்கச்செய்தனர். மலூகான் எதிர்த்து நிற்கமுடியாமல் பின்னடைந்து தன்னந்தனியே ஓட்டம் பிடித்தான். அவன் புறங்

காட்டி ஓடவே அவன் பக்கத்தார்களும் ஓடத்தலைப்பட்டனர். அவர்கள் யானைகளையும் குதிரைகளையும் இவர்க்கள் கைப்பற்றிக் கொண்டனர். இந்த அரசர் மஹாகானை கிருஷ்ணாநதியின் தென்கரைவரையில் பின்தொடர்ந்து துரத்தினர். அவ்விடஞ் செல்லவே, இந்த அரசர் அவனைத் தொடர்ந்துசெல்லாமல் அங்கேயே தங்கிவிட்டனர். அவரது சைனியங்கள் யாவும் வெகுவேகமாகச் சிலநாளைக்குள் கிருஷ்ணாநதியை யடைந்து அவரைச் சேர்ந்துகொண்டனர்.

'மஹா கான் யுத்தத்தில் தோல்வியடைந்து புறங்காட்டி ஓடிச் சென்றான்', என்ற அவன் வரலாற்றைக் கேள்வியுற்று, அச்வபதி நாட்டினதிபதி, "மறுபடியுஞ் சண்டைக்கு இது சமயமன்று. இந்த அரசரோடு தற்காலம் சமாதானஞ்செய்துகொள்வதே தகுதி" என்று தமக்குள்ளே தீர்மானித்து அமைச்சர்களை நோக்கிக் கூறினான். "இவன் றந்தையாகிய நரஸநாயகனுக்குப் பணிந்து அவரைப் போற்றல் என்ற ஒரு சிறந்த குணம் [illegible] இவன் அவன்மகவு ஆனதுபற்றி இவனிடத்தும் அக்குணம் [illegible]படியே வருகிறது. இச்சமயம் இவனோடு பொருதலைக்காட்டிலும் பொருத்தலைக்கைக் கொள்வது நல்லதாயிருக்குமென்று நினைக்கிறேன். அது யுங்களது கருத்துக்கும் இசையுமாயின் அங்ஙனமே செய்வேன்" என்று அரசன் கூறினதைக்கேட்டு அங்கிருந்த அமைச்சர்கள் யாவரும் ஒரே குரலாய் 'அதுவே சரி' யென்றனர். உடனே அவன் தன் சைனியங்களெல்லாவற்றோடும் புறப்பட்டு குதிரையின்மேலேறி நெடுந்தூரங்கடந்து கிருஷ்ணாநதிக்கரைசேர்ந்து அச்சுதராயர் சைனியங்களுடன் தங்கியிருந்த பக்கத்திற்கு நேரெதிர்க்கரையில் தன் சைனியங்களோடு வந்திறங்கினான். கண்ணாடிபோற்றெளிந்து நிழல்காட்டிய அவ்வாற்றுநீரில் இருகரையிலுமுள்ள சைனியங்களின் நிழல்களாடவே, அந்நிழல்கள் அவ்விரண்டரசர்களுக்கும் நடக்கவிருந்த சமாதானவுடன்படிக்கையைக் கண்ணாற்காண நினைத்து மேலெழுந்துவந்த பாதாளலோகத்து ஜனங்களோவெனக் காணப்பட்டன. அவ்விரு அரசர்களுடைய திருவடிகளும் ஒன்றுசேர்ந்து உறவாடவிருக்குதற்கேற்ப, அவ்விருவர் சைனியங்களினின்றும் திசைதெரியாமல் கிளம்பின பெரும்புழுதிகளும், இருகரைகளிலும் ஆகாயத்தை மூட்டி முழங்கிய பேரிவாத்தியப் பேரொலிகளும், அவ்விருவர் சைனியங்களின் துவஜங்களில் கட்டிய கொடிகளினின்றும் கிளம்பி வீசிய காற்றுகளும், ஒன்றோ

142502

டொன்றெருமித்து ஐக்கியமாயினபோலும். அச்வபதிநாட்டானுகிய துலுக்கஅரசன் தலையோடு கால்வரை சுத்த வெண்மையான நிலையங்கிதரித்து அகந்தைமெலிந்து, உடலெங்கும் சட்டை இளம்பி விஷப்பல்லைப்பிடுங்கின பாம்புபோல, விஜயநகரத்து நரேந்திரரது பக்கத்துவந்து தலைதாழ்த்திச்சாலஞ்செய்து வணங்கினன். முதலைவாயிலகப்பட்ட யானைபோல பகைவர் படைநடுவில் நின்று அரண்டு மனமிடிந்து அச்சுதனை நோக்கினன். அப்பொழுது அச்சுதராயர் ஆணைச்சக்கிரஞ்செல்லவே அபயங்கொடுத்து அவனைக்காத்தனர். பிறகு அவனை விடைகொடுத்து அவனிடமேகச்செய்து தாமும்பரிவாரங்களுடன் தம்மிடமேகினர். ஐந்தாறு நாட்களில் ஜயகோஷத்தோடு தம் இராஜதானியாகிய விஜயநகரம் போய்ச்சேர்ந்தனர். அந்நகரத்திலெங்கும் அன்றைத்தினம் மகோற்சவமாகக்கொண்டாடப்பட்டது. இவ்வாறு அச்சுதராயர் விஜயநகரத்தில் வீற்றிருந்து, கிருஷ்ணாநதிக்குத்தெற்கு பூர்வதட்சிணபச்சிம சமுத்திரங்களுக்கிடைப்பட்ட பூமியிலுள்ள ஜனங்கள் மகம்மதியர்களின் கொடுமையைக் கனவிலும் அறியாதபடி, நாடுவாழ நாட்டார் வாழ சமயாசாரங்கள் வாழ, பசுக்களையும் பிராமணர்களையும்மற்றுமுள்ளோரையும் போற்றி முறைதவறாது அரசளித்துவருநாளில், அருணகிரிநாதரின் புத்திரரான ராஜநாதகவியால் இயற்றப்பட்ட அச்சுதராயாப்பியுதயம் என்னும் நூல் பூர்த்தியடைந்து எங்கும் உலாவத்தலைப்பட்டது.

T. S. குப்புஸ்வாமி சாஸ்திரிகள்.

தொல்காப்பியப்பாயிரம்.

சண்முகவிருத்திப் பரிசோதனை. *

சைவசமயாசாரியர்களாகிய அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர், முதலிய நாயன்மார்கள், சிவபெருமானுடைய திருவருளா லவதரித்துத், தேவார முதலிய வருட்பாக்களருளிச் செய்து சைவசமயத்தை நிலைநிறுத்தியதுபோலத், திருவருண் மிகு சிவஞானபோதத்தைக், குருவாய் வந்து கொடுத்தருள் பரன்போல், பருமிகு தமிழை மாநிலத்தோருக், கிருடபவளித்த

* நிருபநேயர்களின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராசிரியர்கள் உத்தரவாதிகள் ஆகமாட்டார்கள்.

விளம்பூரணரும், வடநூற்கடலை நிலைகண்டுணர்ந்த, வானுட்
பெருமைச் சேனவரையரும், உச்சிமேற்புலவர்கொள் நச்சினார்க்
கினியரும், ஆரியமொழியு மனையுறவுணர்ந்து, வார்கட லுலகின்
மன்னியதவர்க்குச், சீரியபாடியந் திராவிடத்தியற்றிப், பவஞான
மறுத்த சிவஞான முனிவரும், இன்னுமனேக மான்றோர்களுந்
தமிழ்செய்த புண்ணியம்போலவதரித்து, அற்புதமான வுரைகளு
நூல்களுஞ் செய்யாவிடிற் றமிழிற் காட்டகன் றுபன்றுளாகும்,
ஒல்காப்பெருமைத் தொல்காப்பியமென வுயர்வுபெற் றிந்நூல்
விளங்குவது மதோடுதோன்றிய பன்னூல்களுமிறப்பவு மிறவா
திதுகாறு நின்று நிலவுவதும், பிண்டமாக விருந்த நூல்களை
மேலே கண்டிருக்கிற வுரையாசிரியர் தம்முடைய நுண்ணறிவினு
னாலினுள்ளவுமில்லவுமாகிய வனேக விடயங்களை விளக்கிப்பிண்
டியாகச்செய்து மப்படிச் செய்தமைக் கேற்பச், சொற்சுவை
பொருட்சுவை, சமையாசாரம், குலாசார முதலியனவுமுடைய
வாய்க் கேட்குந்தோறும், வாசிக்குந்தோறும், நினைக்குந்தோறும்
கண்டம் விம்மி நாத்தழுதழுத்து உதடு துடித்துக் கருங்கண்
மனமு மிரும்புனலாகத் தன்வசமழிந்து பரவச முறும்படி புரு
டார்த்த நான்குந் தரத்தக்க வற்புதமான புராணங்களையு மந்தாதி
கோவை முதலிய பிரபந்தங்களையு மியற்றிய காரணத்தினாலே
யாம் இவ்வுதவி யிவர்கள் புரியாவிடிற் றொலகாப்பியமென்றும்,
தொலகாப்பியமென்றும் வாசிக்கத்தக்க வறிவேற்படுமேயொழிய
வதனுண்மைப்பெயரறிய வல்லார் யார்; கைம்மாறு வேண்டாக்
கொண்மூப்போ லுலகத்துக் கிவர்கள் புரிந்த விம்மை மறுமைப்
பயன்றரத்தக்க விந்நன்றிகள் மறக்கற்பாலனவல்ல; மறப்பின்,
"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை, செய்ந்நன்றி
கொன்ற மகற்கு" என்றபடி யெரிவாய் நரகத்துக் கிரையாவார்
கள். "ஒருமைக் கட் டான்கற்ற கல்வி யொருவற் கெழுமையு
மேமாப்புடைத்து," என்றபடி யிம்மைப் பயனையுந் தந்து வெழு
மையுந்தொடர்ந்து நன்மை பயக்கக்கூடிய விப்பெருதவியை மறந்
து பெறாது பெற்றுக் காப்பாற்றிய வான்றோர்களாகிய மாதா
பிதாக்கள் பேரிற், புகழையும் பொருளையு மவாவி வீண்குற்றங்
கூறிய புதல்வனைப்போல, வத்திரத்தின் குறையை யுகுராத்திற்
கேற்றியாங்கு தன் குற்றமறியாது பிறர் குற்றங்கூறிய வித்தான்
முகத்திலிம்மையிலுமற்பப் பயனாகிய விற்றுதவிபுரிந்த சிலரை
விபந்து நன்றி கூறியிருக்கின்றது. அவ்வுதவியும் பின்னையவர்

கள் குடிப்பிறப்பு முதலியவற்றிற்குச் செய்யப்பட்டதன்று. தமிழ்ப் புலமை நிமித்தமே. அப்புலமையாகிய, பேருதவியை மறந்து விச்சிற்றுதவியை வியந்து கூறியிருக்கு நன்றி கனவான்களுக்கெத்துணைச் சிறப்பின தென்பதுதானே விளங்கும்.

இனி எடுத்துக்கொண்ட பொருளிடையூறின்றி யினிது முடிந்து நன்மை பயக்கும்பொருட்டுக் கவர்பொருள்படாத வுத்தமமாகிய மங்கல மொழியான் முதலெடுத்துக் கடவுள் வணக்கங்கூறி நூல்செய்வதும் நூல்கேட்கப் புகுமாணுக்க னவ்வாழ்த்தைக்கூறிப் பாடங்கேட்பது மரபு.

இந்நூற்குரை யெழுதப் புகுந்த மகா-ள-ள-ஸ்ரீ சண்முகம் பிள்ளை யவர்களுமவ்வாறே, தந்தமொன்றேய், என்றற்றொடக்கத்த வாழ்த்துரைத்திருக்கின்றனர்; இவ்வாழ்த்தின் முதற்சொல் தந்தம்; தந்தமானது யானையின் கொலை முதலிய மறவினை புரியுமோருறுப்பு. அவ்வுறுப்பையுணர்த்து மிம்மொழி மங்கலமாகுமா? அன்றியு மடியாருடைய வேண்டுகோட் கிரங்கி யருள் புரிகின்ற திருச்செவி, கண், முகம், பாதம், கரம், முதலிய வருண்மயமான வுத்தமாங்கங்களைத் தவிர்த்து அதமமாகிய கடின தந்தத்தையும் உத்தம மத்திம குணங்களாகிய சாத்விக விராசசங்களுக்குரிய வெண்மை செம்மை நிறங்களை விலக்கி யதமமாகிய தாமத குணக்கருமையையுங் குறைகுணங்களை யறிந்து பயன்றராத மலையையுங் கடலையு மிச்செய்யுண்முதலி லொன்றுக்குப் பின்றொன்றாகத் தொடுக்கப் பட்டிருக்கின்றன. அவைகளினாலே ஞானமுத்த சித்துருவாகிய விநாயகமூர்த்தி கொலை முதலிய மறவினை புரிபவரென்றும், சாத்துவிக குணமற்றவரென்றும் கிருபையற்றவரென்றும் கவர்பொருட் படுகின்ற இச்செய்யுள் வாயிலா யம்மூர்த்தி யடியார்கட் கருள் பாலிப்பதெங்ஙனம்? நிற்க; புந்தியாகிய பாற்கடலில் விநாயக மலையை நாட்டித் தமிழமுதத்தை யெடுப்போமென்றார். இவ்வுவமானத்தில் முதலிற் றோன்றியது விடமன்றோ? பிற்றோன்றிய வமுத முதலியன வயலாரடைந்தனரன்றோ? அவ்வாற்றானிவ் வாழ்த்தின் பயனப்பிரயோசனமா மென்பது இன்றியமையா தார்க்கிக நியாயமுடிவல்லவா? இலக்கண மிளைஞர் கல்வி கற்க முதலிற் றுவக்குதலந் நூற்றொடக்கத்திலுள்ளது கற்கப்புகு முதிராவறிவையுடைய மாணுக்கனது புத்திக் கிலகுவாயு மலைவில்லாததாயுங் கடின மற்றதாயு மிருத்தல் வேண்டும். அப்படிக்கின்றி கடினமான தந்தத்தையு

ங் கருமையையு மலையையுங் கடலையுங் காட்டியிருப்பது மாணாக்கன் புத்திமலைவுற்றுக் கலங்கித் தடுமாறுமன்றி யெவ்வாறு கூரிதாகும்; இக்காரணங்களாலிச் செய்யுளிந் நூலுக்கு வாழ்த்திலக்கண முடைத்தன்று; தந்தம்கொலை முதலியன புரியுங்கருவியென்பதுஞ் சாத்விக முத்தமமென்பதும் வெளிப்படை. சாத்விக மிராசசம் வெண்ணிறஞ் செந்நிற முடையன வென்பதுந் தாமதம் கருநிறமுடையதென்பதும் கந்தபுராண முகவுரையைப் பார்க்க. மலையுங் கடலு மிரக்கமற்றவர்க்குவமம், திருவிளையாடற்புராண மிடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலமொன்பதாவது செய்யுளிற் புலப்படும்; சுக்கிலாம் பரதர மென்னு மாரிய சுலோகத்திற் சசிவர்ண மென்பதனால் வெண்மையுங் காஞ்சிபுராணம் விநாயக வணக்கத்தில் இங்குலிகக்குரு நிறமென்பதால் செம்மையு முடையவரென்றுணரலாம்.

கொழுச் சென்றவழித் துன்னூசியினிது செல்லுமாறு போலப் பருப்பொருட்டாகிய பாயிரங்கேட்டாருக்கு நுண்பொருட்டாகிய நூலினிது விளங்கும் என்பதற்கு மென்போல சாதாரண தமிழ்ப்பயிற்சியுடைய மேலைப் புலவர்கட்கு விளங்கும் பொருள். பருத்தபொருளாகிய கொழு நுழைந்தவழியிற் றுன்னுகின்ற சிற்றூசியிடரின்றி நுழைவதுபோலப் பாயிரங் கேட்டார்க்கு நூலினிது விளங்குமென்பது, என்னை? கொழு ஊசியைப்பார்க்கினு மிகவும் பருத்த வோராயுதம் அல்லது உழவுத் தொழிற்கருவி; அது நுழைந்த புழையிற் சிறிய ஊசி தடையின்றிச் செல்லுமாதலின் இதுபற்றியே யினிது செல்லுமென்றுங் கூறியிருப்பது. இவ்வாறன்றிப் பிள்ளையவர்கள் கொழுவென்பது ஊசித்துளையின் மேலுள்ள கோலினையென்றுந் துன்னூசி யென்பது தைத்தற்றொழிற் செய்யுநூல் கோத்த துளையையுடைய ஊசிக்காதினையென்றுங் கொழுவுதலாற் கோல் கொழுவெனப்பட்ட தென்றும் பொருள் வரைந்திருக்கின்றனர்; கோலுங்காதுந் தனித்தனியமைக்கப்பட்டு பிறகிரண்டு மொன்றாய்க் கொழுவப்படாமையாலும், இரண்டு மொன்றாகவே யமைக்கப் பட்டமையாலும், கொழுவென்பதூசிக் கோலென்றுந் துன்னூசி யென்பதூசிக் காதென்று முலகவழக்கு, செய்யுள்வழக் கெங்காயினுங் காணப்படாமையாலுங்கூறிய பொருள்பொருத்த மன்று. இவ்வாறன்றி கூறை முதலியவற்றிற் கொழுவப்படுதலாலப் பெயராயிற் றென்றுரைப்பின் னூலன்றிக் கொழுவின்மையறிக; அன்றியு மூசிக்கா

தினுங் கோனுண்ணியது ; கோற்சென்றவழிக் காது இடர்ப்படா தெவ்வாறுசொல்லும்? கடினமாகிய கூறை முதலிய வற்றிற் றைக்கும்போதுங்காது செல்லமுடியாது. இடர்ப்படுவதையு மிம்முயற்சியாலெவ்வோரிடத்தூசி யொடிந்திறுவதையுந் தைத்தற்றொழில்வல்லார் யாருமறிவர். நுண் பொருளாகிய கோலினைப் பருப்பொருளாகிய பாயிரத்திற்கும் பருப்பொருளாகிய காதினை நுண்பொருளாகிய நூலிற்குமுவமித்திருப்பதாகச் சொல்வது ஒருவாற்றானும் பொருந்தாது. மரமென்பது மரவேரென்றாற் போல ஊசியென்பது ஊசிக்காதினை யென்றார். இதனை இலக்கண நன்குணர்ந்த பிள்ளை யவர்களாகுபெயரென நினைத்தார்போலும்.

நூலிற்குப் பிறகுப் பாயிர மேற்பட்டமையானும் நூல் செய்தவனாற் பாயிரஞ் செய்யப்படாமையானும், நூலும் பாயிரமும் வெவ்வேறு பொருள் பயப்பதானும் நூலுக்குப் புறம்பாய்ப் பாயிரமிருப்பதானும் நூல் பாயிர மில்லாதிருக்கின்றமையானும் நூல் பாயிரங் கேட்டார்க்குத் தடையற விளங்கலானும் கோலுங்காது மொரேகாலத்திற் றோன்றினமையானும் கோல் செய்தவனாற் காதுஞ் செய்யப்படாமையானும் கோலுங்காது மொன்றா யிருப்பமையானும் கோலின்றிக் காதின்மையானும், கோலுங்காது மொரு பொருளைப் பயத்தலானும் கோல் சென்றவழி காது இடருற்று செல்லுகின்றமையானும் துன்னூசியின் கோல் பாயிரத்துக்கு உவமமன்று; காது மிக்காரணங்களால் நூலுக்குவமமன்று; ஆயுதம் அல்லது உழவு கருவி என்ற கொழுவானது பாயிரத்துக் கேற்பட்ட விதிப்படி பொருத்த முடைத்து.

ஆனதால் அது அதற்கு வமம், (கொழுவாயுதமென்பதற்கு) கந்தபுராணம் சூரபத்மன் வதைப்படலம் 232வது செய்யுளினுந் திருவிளையாடற்புராணம் திருநகரப்படலம் 72வது செய்யுளினும் (உழவு தொழிற் கருவி யென்பது) சேக்கிழார் புராணம் 3, 4-வது செய்யுளினுங் காணப்படும்.

(இன்னும் வரும்.)

கோவிந்தசாமிச்சோழகர்,
மதுக்கூர்.

விசுவ. (செவியைப்பொத்தி) சிவசிவ! போதும்!
கல்வியு மதியுங் கைவரப் பெற்றது
அறநெறி விட்டிவ ணவத்த மானதோர்
மறநெறிக் கேதுவாம் வாழ்க்கை பெறவோ ?
தந்தைதாய் மொழியைத் தாங்குத லெனக்கு
முந்தையோர் மொழிந்த முழுமறை யாயினும்
அறனலா தியற்றற் கடியேன் பொருந்தேன் !

மங்க. விறற்படை மதலாய்! வெற்றி மடந்தையும்
அரசச் செல்வமு மாக்கமும் பெயரும்
விரசுவார் வணங்கும் வீரமுங் கீர்த்தியு
நின்னுடைச் செல்வமாய் நிலைக்கக் கண்டு,
மன்னவன் றாயென மாநிலங் கூற
நல்வினை யென்வயி னுடைய வன்றே,
மல்வலித் திண்டோண் மகனே! பாக்கியம்
அடைந்தவ ளாவேன் ?

விசுவ. அம்மணி! யடியேன்
கடைப்புறங் காவல் காவலர் செலுத்தப்
பாவலர் புகழப் பனிக்குடை யதன்கீழ்
ஏவல ரிறைஞ்சும் இறைமக னாயின்
பாக்கியம் படைத்துப் பலபல போகமும்
ஆக்கிய வின்பமு மடைந்து மகிழ்வையோ ?
அன்னையே! விஜய நகர மதனில்
மன்னவர்ப் பயந்த மாதவப் பெண்டிர்
நின்வயின் மிக்க நேய முடையார்
இன்பமு நலமு மெண்ணருஞ் செல்வமும்
ஆடையுங் கலனு மரிவைய ராயமும்
மேடையு மாடமு மென்மலர்ச் சோலையும்
சில்லெனக் குளிர்ந்த சீதளச் சேக்கையு
மெல்லென மேனி வீச தென்றலும்
இன்னிசை யின்பமு மெதிர்ந்தன வாயினும்,
நன்னிலை தனையுள நாடிற் றிலையால்,—
என்றவர் கூறின ரென்றுநீ பகர்ந்தன
அன்றே மறந்தனை யன்னாய் !

மங்க. பாலக!
நின்மொழி யறமே யாயினு மாகுக ;

என்னுரை கேட்டியேல், இவனுறு தானையோ
டணிமதிற் கூட லடைந்தினி யரசாய்
மணிமுடி மன்னவர் வணங்கவீற் றிருப்பாய்;
அரசதந் திரமு மன்னதே!—

விசுவ. அழகிதே
அரச தந்திரம்! ஆருனக் குரைத்தார்?
பேதைமை கொண்டு பிதற்று கின்றனை;
மோதுறு படையுடன் முனைந்து மன்னவன்
நாளையே போரில் நலிய வந்திடும்
வேளையித் தந்திரம் வெல்லுமோ? பேதாய்!
அன்றியு மனுமுறை யாட்சி செய்யு
மன்றன் மாலை மன்னவர் மதியார்,
துன்பமே சுற்றும், துரோகசிந் தனையால்
மன்பதை விரும்பார், மாநர கெய்துவம்;
ஆதலி னின்னுரை பகற்றற் பாலதே!—
போதுக!

மங்க. (மிக்கசினங்கொண்டு)
என்னுரை புல்லிதென் றிகழ்ந்தனை!
நல்லது! போர்த்திறம் நாடினை! நீவிர்
வெல்வதுந் தோற்பதும் விளங்கு நாளையே!

(மங்கம்ம வெளியேசெல்ல)

களம்—2 முற்றும்.

அங்கம்—4. களம்—3.

சோழவந்தான்பக்கத்தில் தந்தையும் மகனும் தானையுடன் விளைந்து போர்புரிந்தனர். சண்டையில் மதுரைச்சேனை தளர்ச்சியடைய நாகமன் சிறைப்பட்டனன். இப்போரின் வரலாறும், விசுவநாதன் வெற்றியும் ஓர் மதுரைப்புலவன் பாடுகிற தானை, வஞ்சி, வாகைமாலைகளால் நன்கு விளங்கும்.

அங்கம்—4, களம்—3.

இடம்—சோழவந்தான்புறத்து வெற்றிடம். விசுவநாதன் பாசறை.
காலம்—மாலை.

[இரண்டு போர்வீரர்கள் ஓர் புலவனை யிழுத்துவந்து.]

(நேரிசையாசிரியப்பா.)

முதல்வீர. நீவிரோ புலவர்? நீவிரோ புலவர்?
மேவிய கவிகையும் விதானச் சிவிகையும்

விருதுரைப் பாரும் விரன்மோ திரமும்
அரைதனிற் பட்டும் அமைந்தமுண் டாகும்
மன்னவ ரியாரு மதித்தன ராகி
யன்னவ ரளித்ததோ ராரமுந் தூசும்
எவன்கொலோ வைத்தீர்? எட்டுச் சுவடியுந்
தவறிய தெங்ஙனே? தப்பறை கூறினீர்,
நீவிரோ புலவர்? நேரலர் விடுத்த
ஏவல னீயே! வெம்படை யாக்கமு
நேர்மையுங் கண்டு நிருபற் குரைக்க
நேர்ந்திவண் வந்த நீவிரோ புலவர்?
நாகமக் குரிசில் நலமே? சந்திர
சேகரன் றானுஞ் சிறைதனிற் சுகமே?
வஞ்சமுங் களவும் வயங்கு சூழ்ச்சி
நெஞ்சுடை யொற்ற நீயோ புலவன்?

புலவ. அன்புமிக் குடையீர்! அடியோ பொறுக்கிலன்,
முன்புவி வேந்தர் மூவரும் வழங்கிய
வரிசையா லுயர்ந்தேன் வாணிதி பெற்றேன்.
புரசை யானையும் புரவியுந் தேருங்
காணியு மில்லமுங் கைவரக் கண்டேன்;
வாணியுங் கமலையு மருமகள் மாமி
யானதோர் வழக்கா லடியன் பொருளெலாம்
போனவா கண்டேன்; பொல்லா வறுமைநோய்
வந்தெனைப் பற்றி வாதனை கண்டது.
நொந்தனன், மனைவி நுவல கிற்றிலள்;
குழவியுந் தாய்முகங் குழைந்து நோக்க,
பழவினை கொடிது! பரிந்தெனை மனைவி
நோக்க, நும்மிறை நொய்தினென் மிடியைப்
போக்கு மென்றிவண் போந்தனன், பாரீர்!
இந்திர னிருந்தன னிடையிற் கலையாய்;
வந்திரு விழிகளில் வருண னமர்ந்தனன்;
தேயுவும் வயிற்றினைத் தேடிப் புக்கனன்;
வாயுவே யன்றி மற்றுண வறியேம்;
தீரங் குறைந்து தேய்ந்தவிவ் வுடலைச்
சார மற்றதாச் சமனும் வெறுத்தான்;
நிருதி போலு நிலவிய கொடையான்

விருதுடை நாதன் விரும்பிக் குபேர
னுக்கு மென்றிவ ணடைந்தனன், கேண்மின்!
தாக்கினிர், தாளேன்! தவறுமோ வீசன்
விதிவலி ; நீவிர் வேறு யெண்ணினீர்!
பதமுறப் பாடும் பாவல னறிமின்!

(பாசறையிருந்த மற்றோர்புலவன் வெளிவந்து)

கச்சிப்புல. யாரடா வெளியே? யாதடா வரவம்?
போரது முடிந்ததோ? புகலுமின், இவரார்?!

2-ம் வீர. புலவராம்! தமிழைப் புந்தியாம் புணையால்
நிலையுறக் கண்டவர்! நெருநல் வந்தவர்,
இப்புலந் துன்னி யின்னிசை பாடிச்
செப்பரு மிடிகெடச் செல்வமும் பரிசும்
பெற்றுள மகிழப் பெருந்தகை யருளை
முற்றினு நாடி முன்னினர்! யாங்கள்
போர்க்கள முற்ற பொருந்தார் தூதென
வீர்த்து வந்தனம், இருங்கவி வாண!

கச்சிப்புல. வம்மின்! புலவீர்! வறுமைநோய் துய்த்துக்
கம்பிய குரலுங் கந்தைச் சிதாரும்
இளைத்த மெய்யு மேந்திய கையுமாய்க்
களைத்து வந்தீர்! காவலன் கண்டால்
இரங்கும் வருந்து மேழைமை யகற்றும்
அரங்க மேற்றி யன்புரை கூறும்.

மதுரைப்புல. மன்னவன் புகழை மருங்கிருந் துரைக்கும்
பன்னரும் புகழ்சால் பாவல ரேறே!
இன்னுரை கேட்டேன் ; இன்னல்
என்னைவிட் டோடும்; இன்ப நாடுமே!

(தானைமாலை)

பொன்முடி யரசவை பொலிதரும் புலவ!
மின்னொளி வடிவேல் வேந்தன் பெருமை
போர்முனை யறிந்தேன், புகலுவன் கேண்மின்!
கார்முனைந் தெழுந்து காலாந் தரத்திற்
பேரொலி காட்டிப் பிறங்கு மாறுபோற்
பாருளோர் திகைக்கப் பணைக்கை நீட்டிக்
களிற்றின பொருபாற் கலந்து பிளிற,

துளித்தெழு நுரையொடு துள்ளு மலைபோற்
பாய்பரிப் பந்திகள் படர்ந்து கனைக்க,
வேய்வளர் மலைகள் விசையுட னெழுந்து
தாக்குதல் போலத் தடந்தேர் முட்ட,
ஆக்கையிற் றைத்த வம்பினை வாங்கி
நாரியிற் பூட்டி நடுங்க வெய்து
வாரியைக் கலக்கு மந்தரம் போல
வீரர்க ளொருபால் வீரம் பகர,
கார்கடந் தப்பாற் கற்பக மாவி
விண்ணகந் திரிந்து விரிசிறை யுதறி
வண்ணம் பலவாய் வயங்கும் பறவைபோல்
கண்ணகன் களத்திற் காவலர் கொடிகள்
நண்ணியந் தரத்தி னுடகம் பயில,
ஓங்கலிற் றண்மதி யுதித்தெழு மாறுபோற்
றாங்கலில் வெண்குடை துலங்கி மீதோங்க,
வெள்ளநீர்த் தரங்கம் விரிதலிற் கவரி
வெள்ளிவெண் கோட்டு வேழமேற் பொலிய,
செந்நிறக் குருதி சேண்படிந் தென்ன
பொன்னிறக் கதிரவன் பொலஞ்சுட ரளைந்து
களிறொடு புரவியுங் காலாட் படைகளும்
நெளிந்துறு தன்மையா னிலத்தெழு பராகந்
திரள்விரிந் தாடிச் சிவந்து காட்ட,
பரவையின் பரப்பிற் படியுந் தாரகை
யினத்திளங் கதிரி னெதிரொளி போலத்
தனித்தனி வீரர் தாங்கிய படைகள்
தானையங் கடலிற் றவாவொளி வீச,
மேனிவந் தெழுந்து விரிதிரை போர்க்குங்
கற்பாந் தத்துறு கார்முழக் கென்ன
விற்பால் விளக்கும் வீறுடைச் சங்கும்
பேரியு முவகை பெரிதுறக் காட்டுந்
தூரியம் பலவுந் துடியுஞ் சின்னமுங்
கலந்து மயங்கிக் கல்லெனக் கறங்க,
நிலமும் விசும்பு நிலைதடு மாற,
நாகமன் சேனையு நாதனு
வேகவெம் படையும் விரைந் தெழுந்தவே!

(வஞ்சிமாலை)

எழுந்த படைக ளிருகட லெதிர்ந்தெனப்
புழுங்கு சினத்துடன் புகுந்து பொருதவர் !
சொல்லவும் பெறுமே ? சூலிருங் கொண்மூ
கல்லகம் பொழியுங் கனமழை கடுப்பப்
பெருங்கணை மாரி பெய்தனர் வீரர் ;
மருங்குறு வாளை வாங்கிச் சிலவர்
எதிர்ந்தோர் தம்மை யிருகூ றுக்கினர் ;
அதிர்ந்து நடந்தங் கறைகூ வினரைத்
தண்டாற் புடைத்துத் தள்ளினர் சிலவர் ;
கண்டார் கலங்கக் களத்தவிந் தார்பலர் ;
அற்றகை வாங்கி யறுத கைக்கொடு
செற்றனர் சிலரைச் சிங்க வேறன்னார் ;
தலையற் றனர்பலர் ; தாளற் றனர்சிலர் ;
சிலையற் றனர்பலர் ; நிலையற் றனர்சிலர் ;
தோள்பட் டனருந் தொடைபட் டனரு
நாள்பட் டனரும் வாள்விட் டனரும்
பரிகெட் டனரும் படைகெட் டனருங்
கரிகெட் டனருங் கணக்கிறந் தார்கள் ;
வாலிழந் தோடின வாம்பரி சிலவால் ;
காலிழந் திட்ட கலினமா பலவால் ;
துதிக்கை யிழந்த தும்பிகள் கோடி ;
க்தும்பின மிழந்த கரியினங் கோடி ;
பாரொடிந் தழிந்தன பலபல தேர்கள் ;
ஆரொடிந் தழிந்தன வலகிலா விமானம் ;
கட்டொழிந் தனசில தடந்தேர் ; கொடுஞ்சி
பட்டொழிந் தனவாற் பற்பல திகிரி ;
புகையொடு பரந்தவும் பொங்கெரி கான்றவுங்
ககனமேற் சென்றவுங் களத்திற் பட்டவும்
பரியினைப் பிளந்தவும் பதாதி சாய்த்தவுங்
கரியினைத் துளைத்தவுங் காலெனச் சென்றவுந்
தலைகளை யுடைத்தவுந் தரியலர் படையின்
நிலைகளைந் தனவும் நெடுங்குழாய் கான்ற
கரும்பொற் றுண்டுகள் கணக்கிறந் தனவால் !
அருங்கவிப் புலவ ! ஆயிர நாவுடை

யனந்தனும் புகல வாற்ற லிலானேல்,
மனந்துணி வெய்துமோ? மற்றது கோடியால்!
அடுத்திவ் விருவ ரமர்க்களந் தானே
யெடுத்துமேற் செலவே, யிளைத்தோன் படைகள்
வென்னிட, நாகம விலங்கு
மன்னவன் வலையில் வந்தகப் பட்டதே!

[விசுவநாதனும், அரியநாதனும் உள்ளே பிரவேசிக்க]

(வாகைமாலை)

வந்தகப் பட்ட மதுரை மன்னன்
தந்திர மிழந்தனன்; தனயன்—இவரே
ஆகுதல் வேண்டும்—அரும்போர் கடந்தோய்!
சாகரஞ் சூழ்ந்த தராதல மெல்லாஞ்
செங்கோ லோச்சுஞ் செல்வம் பெறுவோய்!
எங்கோன்! என்னுயிர்! எங்குறை தீர
வெழுந்தகற் பகமே! எதிலார் பகையே!
தொழுந்தொறு மன்னவர் தொங்கன் மவுலி
தோய்வுறத் தேய்வுறுந் தொடுகழல் வீர!
பாய்திரை யுலகிற் பழயநல் லறங்கள்
நிலைபெற வந்த நீதியின் னிலயமே!
விலையொரு காசு மேவப் பெறாத
துன்னற் சிதாருந் தொடர்ந்த வறுமையு
மின்னற் படுத்து மேழையேன் வார்த்தை
யின்னுரை யருந்து மிருசெவிக் கேற்றந்
தன்னைப் பயக்குமோ? தமிழறி புலவரைத்
தாங்குந் தண்ணளித் தடக்கை வள்ளால்!
வாங்கு வரிசிலை வயவர்தந் திலக!
ஆயினுங் கேட்டி! யரும்போர் விளைத்த
பேய்குனித் தாடும் பெரும்போர்க் களந்தான்
சுனைவளக் குன்றுசூழ் சோழவர் தானெனும்
புனல்வளச் சிற்றூர்ப் புறத்து வெற்றிடம்;
சோழமா ளிகையிற் சூழ்படை தொலைத்துச்
சோழனைச் செற்றுத் தோழமை கொண்ட
பாண்டியற் குரிமைப் படுத்திய தாக
வாண்டுளோர்க் கிதமுற வபிநயங் காட்டிக்
கன்னிநா டதனைக் கவர்ந்த வீரனு

மன்னவன் பகைவன் ; வருதினி வாரிதி !
போர்த்திற மெம்மாற் புகல வொண்ணுமோ ?
பார்த்தவர் திகைப்பர், பரிதிவா னவனுங்
கீட்டிசை யுதித்துக் கிளர்ந்து மேற்றிசைக்
கோட்டினை யடுத்துக் குறுகும் வரையில்
வெம்போர் விளைத்தனை ; விசும்புளோர் வியந்தார் !
கழ[illegible] துலகங் கூடு ஆறு கலம்போற்
சுழன்றது ! பகைவ ராசிப் படைகெடத்
தழல்விழிப் பரியினங் காவுறச் செலுத்தினை ;
அணிவகுத் திட்ட வனிகங் குலைந்திடக்
கணிப்பருங் குண்டுகள் களத்தி லுய்த்தனை ;
கூறுவ தென்னினி ? குருதியா றோடப்,
பாறுகள் சுற்றப், புல்லினக் குன்றி
லலகையின் கூட்ட மணுகிநாய் தொடர,
நிலைபெயர்ந் திரிந்து நேரலர் தானை
பின்னிட் டோடப், பெட்பிற் குறுநில
மன்னவர் வணங்கி வாகையைச் சூடத்,
திருப்புயந் தன்னிற் றிருவிருந் தாட,
விருப்பொடு முரசொலி வெற்றியை விளக்க,
நாற்கடற் றானை நாகமன் றோள்வலி
தோற்புற் றனனுந் துவண்டு நிற்ப,
இன்றுநீ பெற்ற வியம்பரு வெற்றியைக்
குன்றிருந் தாங்கு குறிப்புட னோக்கினன் !
கண்டவா பகர்ந்தேன், காவல ! வுன்னை
மண்டலம் பரந்த வான்புகழ் சேர,
வெண்டிசை மதிக்கு மிறைவ !
அண்டின னென்னை யம்புயப் பொன்னே !

கச்சிப்புல. (விசுவநாதனைநோக்கி)

கவித்திற முடையார் கல்விமிக் குடையார்,
புவிக்கொரு திலக ! போரிடைக் கண்டநின்
னாற்ற லனைத்து மழகுறப் பாடினர் ;
ஏற்றன னியானு மிருசெவிக் கமுதாய் ;
தானையும் பாடித் தரியலர் மேற்செல
வேனைய வாகையு மெழிலுறப் பாடினர் ;
ஆதலிற் புல்வ ரருளிய மாலையைக்
காதலித் தவரைக் கண்ணியஞ் செய்க.

தமிழகம்.

இது தஞ்சைத் தமிழ்ச்சங்கத்திலிருந்து மாதந்தோறும் வெளிவரும் ஒரு பத்திரிகை. இதன் வருஷ சந்தா இந்தியா பர்மாவுக்கு ரூ. 1—8—0. சிங்கப்பூர், பினாங்கு, முதலான விடங்களுக்கு ரூ. 2—8—0. இப் பத்திரிகை வேண்டுவோர் இதன் மானேஜர் அவர்களிடத்தில் சந்தாவை முன்பணமாக நேரே செலுத்தியாகிலும், அல்லது மணியார்டர் மூலமாயனுப்பியாகிலும் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளலாம். பலநண்பர்களின் வேண்டுகோளின் நிமித்தம் மாணாக்கர்களுக்குச் சந்தாவைக் குறைத்திருக்கிறோம். ஆங்கில கலாசாலையிற் படிக்கும் மாணாக்கர்கள் தமது தலைமை உபாத்தியாயர் மூலமாய் விண்ணப்பம் செய்துகொள்ளுவார்களானால் அவர்களுக்குப் பத்திரிகை ரூ. 1—0—0க்குக் கொடுக்கப்படும். பத்திரிகைக்கு விஷயம் எழுத விரும்புகிறவர்கள் தங்கள் வியாசங்களைப் பத்திராதிபர்பேருக்கு அனுப்பக் கோருகிறோம்.

விளம்பரம் போடுவதற்கு வரியொன்றுக்கு அணா 1. நீடிய காலம் பிரசுரித்து வரவேண்டியவைகளுக்குப் பிரத்தியேக ஏற்பாடு செய்யப்படும்.

K. இராமானுஜ ஐயங்கார்,
மானேஜர், தமிழகம்,
தஞ்சை.

புத்தக விளம்பரம்.

இதனடியிற் கண்டிருக்கும் புத்தகங்கள் தஞ்சைத் தமிழ்ச் சங்கத்தில் விலைக்கு அகப்படும். வேண்டியவர்கள் மேஷ சங்கக் காரியதரிசிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

		ரூ. அ. பை.
1.	கத்தியசிந்தாமணி, ஸமஸ்கிருதவசன காவியம் (வாதீப சிம்மசூரியினால் செய்யப்பட்டது)	2—0—0
2.	க்ஷத்திரசூடாமணி, (ஸமஸ்கிருதகாவியம்) காலிகோகட்டிடம்.	0-15—0
3.	ஜீவந்தர சம்புகாவியம், ஸம்ஸ்கிருதம் (ஹரிசந்திர மகாகவி.)	1—0—0
4.	தஞ்சை நாயக ராஜவம்சசரித்திரச் சுருக்கம், (தமிழ்)	0—2—6
5.	ஸம்ஸ்கிருத நீதிமஞ்சரி, நம்பர் 1.	0—6—0
6.	சுவாமிநாதவிஜயம்.	0—1—0
7.	தோல்காப்பியப்பாயிர விருத்தி	2—0—0
8	மாலைமாற்று மாலை.	0—4—0
9	சிவக்ஷேத்திர யாத்திராநுகூலம்	0—4—0

தஞ்சைத் தமிழ்ச்சங்கம்,
7—10—05.

உ. அப்பாசாமி ஐயர்,
காரியதரிசி.

பரஸ்பர சகாய கல்யாண சபை.

(எட் ஆபீஸ், மானோஜியப்பாவீதி, தஞ்சாவூர்.)

இந்த சபையில் சேரும் மெம்பர்கள் தங்கள் குழந்தைகளுக்குக் கல்யாணம் செய்யுங்காலத்தில் திரவிய சகாயம் கொடுக்கப்படுவார்கள்.

இச்சபையினாலுண்டாகும் லாபத்தை மெம்பர்கள் சொற்ப காலத்திற்குள் பார்க்கலாம். குழந்தைகளுள்ளவர்கள் உயிரோடிருக்கையிலேயே தாங்கள் செய்யவேண்டிய கடமையை நிறைவேற்றுவதில் ஏற்படும் பணச்செலவிற்கு இச்சபையார் பண உதவி செய்ய முயலுவதை ஜனங்கள் அறியவேண்டும். இதில் மரண பண்டுகளில் போல சேரும் மெம்பர்கள் ஜீவநாள் முழுவதும் சந்தா செலுத்த வேண்டியதில்லை. குறிப்பிட்ட கல்யாணம் நடந்த பிறகு அவர்கள் சபையை விட்டுவிடலாம். மாதம் கொஞ்சமாய்ச் செலுத்தியதை ஒரே காலத்தில் சேர்த்துக் கொடுப்பதுடன் குறைந்தது இரண்டு மடங்கு ஒவ்வொருவருக்கும் போனஸ் கிடைக்கும்.

மாத சந்தா ரூ. 1 அல்லது ரூ. 2 கொடுத்துவந்தால் கல்யாண சமயத்தில் கொடுத்த தொகைக்கு இரண்டுமடங்குக்குக்குறையாது தகுந்த உதவி கிடைக்கும்.

சென்ற ஜூலை மாதத்தில் திருவாரூரிலிருந்து சேர்ந்த ஒரு மெம்பருக்கு ரூ. 55 விவாக காலத்தில் சபையிலிருந்து கொடுக்கப்பட்டது. அவர் செலுத்திய தொகை ரூ. 10 தான்.

இதில் மூவகை கல்யாணங்களுக்கு மெம்பராகச் சேரலாம்.

— உபநயனம், விவாகம், திரக்ஷிகல்யாணம்.

சேரும்போது பிரவேசக் கட்டணம் ரூ. இரண்டு.

தகுந்த கனவான்கள் டைரெக்டர்களாயிருந்து சபையை நடத்திவருகிறார்கள்.

விபரமான ரூல்புஸ்தகம் விலை அணா ஒன்று, பை. ஆறு. அனுப்பி வாங்கிப்பார்க்கலாம். சேருபவர்களுக்கு வெகு லாபமுண்டு.

பணம் அனுப்புவோர்கள் தஞ்சாவூர் கல்யாணசுந்தரம் ஹைஸ்கூல் உபாத்தியாயர் மகா-ள-ள-ஸ்ரீ கே. இராமானுஜ ஐயங்காருக்கு மணியாடர் மூலமாய் அனுப்பவும். அவர் ரசீது தவிர வேறு ரசீது செல்லாது.

ஆங்காங்கு கமிஷன் ஏஜெண்டுகள் தேவை.

பணம் தவிர மற்றைய சகல லெட்டர்களும் பின்வரும் விலாசத்திற்கு அனுப்பவும்:—

மானேஜர், பரஸ்பர கல்யாணசபை.

தஞ்சாவூர்.